629

REGISTERED No. M. 6165. அறு. 2

# பத்ஹுல் இஸ்லாம்

# FATH-HUL-ISLAM

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
6 - NOV 1956
MADRAS

629
4-56

மாத பத்திரிகை

நவம்பர் 1956.

விஷயம். பக்கம்.

'ஓடி வந்து ஈமான் கொள்ளும் உத்தமர் ஆவீர்' ... ... 1

ஏ மானிடனே! அல்லாஹ்வைப் பணிந்து கொள்
(J. ஸலாவுத்தீன், கோட்டார்.) ... ... ... 7

திருக்குர்ஆன் சாரசங்கிரஹம்
(ரஹ்மத் பாகவி) ... ... ... ... ... ... 11

நபிகள் நாயகம் (ஸல்) அவர்களும்
குர்ஆனின் கல்வுபதேசமும் ... ... ... ... 15

ஏமாற்றம்!
(மாஸ்டர் ஹாரிஸ் பாபு) ... ... ... ... ... ... 19

இஸ்லாமிய சரித்திரச்சாரம்
(T. F. R. மஆலி ஸாஹிபு-பாகவி) ... ... 25

... சிப்கத்துல்லா அல்லது
... ப தூயவர் ... ... ... ... ... ... 29

... இஸ்லாம் ஆபீஸ் :
... ரோட், திருவல்லிக்கேணி, மதராஸ் 5.

JL
Q7ω2 ... N24P2
...
187057

# பத்ஹுல் இஸ்லாம்.

சந்தா விபரம்: இந்தியா, பாகிஸ்தான், ஸிலோனுக்கு

| | | |
|---|---|---|
| வருஷ சந்தா | ரூ. | 1–8–0 |
| தனிப் பிரதி | அணா. | 0–2–0 |
| மற்ற வெளி நாடுகளுக்கு வருஷ சந்தா | ரூ. | 2–0–0 |

எல்லா ஊர்களிலும் ஏஜெண்டுகள் தேவை. எல்லா விஷயங்களுக்கும் கீழ்கண்ட விலாசத்திற்கு எழுதவும்.

மானேஜர்,
பத்ஹுல் இஸ்லாம்,
20, ஹைரோட், திருவல்லிக்கேணி, மதராஸ் 5.


[ஹதீதுகள்]

## நபிநாயகத்தின் திருவாக்கியம்

(மிஷ்காத்தே ஷரீபின் மொழி பெயர்ப்பு)

(முதற் பாகம்)

இதில் நமது நாயகம் முஹம்மது முஸ்தபா றஸூல் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் திருவாய் மலர்ந்தருளிய ஹதீதுகள் அடங்கி இருக்கின்றன. முதற்பாகம் 930 ஹதீதுகள் அமைந்தது. டிம்மி 1-8 ஸைஸில் 288 பக்கங்கள் கொண்டது. கிளேஸ் காகிதம் கலிகோ பைண்டு.

ரூ. 2—4—0

ஹாஜி எம். எ. ஷாஹுல் ஹமீது அண்டு ஸன்ஸ்,
கெ 20, ஹைரோட், திருவல்லிக்கேணி, மதராஸ், 5.

# பத்ஹுல் இஸ்லாம்

நவம்பர்—1956.


## 'ஓடிவந்து ஈமான் கொள்ளும் உத்தமர் ஆவீர்.'

"நகரத்தின் ஓரத்திலுள்ள ஊரிலிருந்து ஓர் ஆடவர், ஓடோடியும்வந்து, (நபியின் போதனையை ஏற்று ஆதரித்து) "ஏ எனது கூட்டத்தினரே, நீங்கள் இத்திருத்தூதர்களுக்கு வழிபட்டு ஒழுகுங்கள்; மேலும் (பிரயாசைக்கு) பிரதிபலன் வேண்டாதவர்களை(உத்தமர்களை)யும் பின்பற்றி ஒழுகுங்கள்; (உண்மையில்) இவர்கள் சன்மார்க்கம் பெற்றவர்களாவர்" என்று கூறினர்.

திருக்குர்ஆன்: ஸூரா-யாஸீன் ஆயத்து: 21, 22

உலகம் தோன்றிய காலந்தொட்டு மனித சுபாவத்தில் சில நல்ல குணங்களும், பல கெட்ட குணங்களும் இருந்தே வந்துள்ளன. ஆண்டவன் புறத்திலிருந்து தீர்க்கதரிசிகளும், திருத்தூதர்களும், நபிமார்களும் தோன்றி, பொது ஜனங்களை சுத்த சத்திய சன்மார்க்கத்தின் பக்கமும் ஏக தெய்வ வணக்கத்தின் பக்கமும் அழைக்கும் தூய பிரசார வழக்கமும், ஆதிகாலந்தொட்டு இருந்து வந்துள்ளது.

மனிதரின் சுபாவங்கள் இயற்கையிலேயே, பலப்பல விதமாக இருந்து வந்துள்ளன. சிலர், சொன்னதைத் தடையின்றி ஏற்றுக் கொள்ளும் மெழுகு மனம் படைத்தவர்களாய் இருந்து வந்துள்ளனர். வேறு சிலர், எதையும் எளிதில் ஏற்றுக் கொள்ளாமல் மறுத்துவிடும்

கல் மனச் சுபாவம் உடையவர்களாய் இருந்து வந்துள்ளனர். இன்னுஞ் சிலர், மெழுகு மனமும் படைக்காமல் கல்மனமும் படைக்காமல், காற்றச் சேறு உள்ளம் உடையவர்களாய் இருந்து வந்துள்ளனர். இன்னோரின் குணப்பாடும் செயல் முறையும் யாதெனில்: நல்மொழி கூறி சன்மார்க்கத்திற்கு அழைக்கும் சத்திய சீலர்களுக்குக் கெடுதி செய்யும் மூர்க்க சுபாவ முடையவர்களா யிருந்து வந்தனர். சேற்றில் கல்லைப் போட்டால் அந்தச் சேறு, போட்டவர் மீது எதிர்த்து வந்து வீழ்வது வழக்கம். இதுபோல், அன்னோர் நபிமார்களுக்கும் ரஸூல் மார்களுக்கும் சதா எதிர்ப்பும் தீங்கும் புரிந்து வருவார்கள்.

வெறுங் கற்குவியலில் ஒரு வைரக்கல் தோன்றும். சேற்று நீரிலிருந்து செந்தாமரை முளைக்கும். கெட்டவைகளின் மத்தியில் ஒரு நல்லதும் உண்டாகும். இது இயற்கை தன்மையும், இறைவனின் மகத்துவமு மாகும். தாமரைத் தடாகத்தில் முளைத்திருக்கும் நறு மலர்களில் தெவிட்டாத தேனும் உற்பத்தியாகிறது. மலர் நடுவில் மகரந்தத்தி னிடையே நல்ல தேன் துளியும் இருக்கும். அதனை யடுத்து, அதே குளத்தில், அந்த மலருக்குப் பக்கத்திலேயே வறட்டுத் தவளைகள் நெளிந்து வாழ்ந்து கொண்டிருக்கும். ஆனால், அம்மூடப் பிராணிகட்கு, நறு மலர்களிலுள்ள அருந்தேனை, இனிய பானத்தைப் பருகி சுவைத்து அனுபவிக்கும் சக்தியோ, பாக்கியமோ கிடையாது. அந்த மண்டுகத் தவளைகள், சேற்றையும் அழுக்கையும் அனுபவித்து உழன்று கொண்டிருக்கும். ஆனால், வனத்திலும் காட்டிலும் வாழும் வண்டு இனங்கள், அங்கிருந்து ஓடோடியும் வந்து, செந்தாமரை மலர்த்தேனை சுவைத்து, எடுத்துக் கொண்டு போய் இன்பம் அடையும்.

இந்த பாக்கியமும் சுபாவமும், இயற்கையாகவே உத்தம சுபாவம் பெற்றுள்ள மூமின்களுக்கும் சீரிய பக்த கோடிகளுக்கும் உண்டு. இவர்கள், எங்கு வசித்த போதிலும் சரியே, எங்கு எத்தொல்லையில் கிடந்த போதிலும் சரியே, இவர்களின் சிந்தையும் மனமும் சன்மார்க்க லக்ஷியத்தின் பக்கமே இருக்கும். நன்மொழியும் நல்லுபதேசமும் எங்கிருக்கின்றன வென்று தேடியலைந்து, அதை அடைந்து அனுபவித்துக் கொண்டிருப்பர் இந்த உத்தம சீலர் என்னும் முத்தகின்கள்.

அன்பர்களே, இத்தலைப்பக்கத்தின் தலைப்பில் பொறிக்கப் பட்டுள்ள திருக்குர்ஆன் ஆயத்தின் பொருளைக் கூர்ந்து பாருங்கள்.

அதன் கருத்தை சுவைத்துப் பாருங்கள். நகர்ப் புறத்திலே, ஜனக் கூட்டத்தின் மத்தியிலே சுத்த சத்திய சன்மார்க்கப் பிரசாரம் நடந்து கொண்டிருக்கிறது. அல்லாஹ்வின் திருத் தூதராகிய நபிமாருடைய- ரஸூல்மாருடைய பிரசாரம் என்னும் நல்லுபதேசம் நிகழ்ந்து கொண்டிருக்கிறது. கடைத் தெருவிலும், வீதிகளின் முச்சந்தி யிலும், மேட்டுப் பிரதேசத்திலும், ஜனக்கூட்டத்தி னிடையேயும் அந்த திருப்போதகராகிய நபி அலைஹிஸ்ஸலாம், அவர்கள் வஅலு நஸீஹத்து செய்து கொண்டிருக்கிறார்கள்.

"ஏ ஜனங்களே, எனது சகோதரர்களே, எனது அன்பர்களே, நான் சொல்வதைக் கேளுங்கள்; நான் உங்களுக்கு இதமானதைக் கூறி நலவானதைச் செய்யவே வந்திருக்கிறேன். நான் உங்களிடம் பணமும் பொருளும் கேட்கவில்லை; பெருமையும் பதவியும் கோரவில்லை. நான் ஆண்டவனுடைய சேவகன்; உங்களுக்கொரு ஊழியன். உங்களுக்கு சத்தியத்தை எடுத்துரைக்க வந்திருக்கிறேன். உங்களையும் என்னை யும் படைத்த இறைவன் ஒருவனே: அவனையே, நாமெல்லோரும் வணங்க வேண்டும்; அவனிடமே உதவி கோர வேண்டும்; அவன் கட்டளையை ஏற்று, நல்வழியில் ஒழுகவேண்டும். மாந்தர் ஒருவர்க் கொருவர் உபகாரியாக வாழவேண்டும்; யாருக்கும் தீங்கு செய்யக் கூடாது; பாப காரியங்கள் புரியக்கூடாது, புனித செயல்கள் புரிய வேண்டும். பரஸ்பரம் அன்புடையவர்களாய் மாந்தர் வாழவேண்டும்" என்பது போன்ற இதமான நன்மொழிகளைத்தான் அந்த திருத் தூதர் நபி ரஸூல் ஜனங்களுக்கு உபதேசம் செய்கின்றார்.

ஜனங்களில் பெரும்பாலோர், மூடர்களும் மூர்க்கர்களுமாகத் தான் இருக்கின்றனர்; அவர்களில் சிலர், அந்த நபியை நையாண்டி செய்து பரிகாசம் புரிகின்றனர். சிலர் இடித்துத் தள்ளிவிட்டுப் போகின்றனர். சிலர் தூரநின்று கல்லை விட்டெறிந்து விட்டுப் போகின் றனர். சிலர், எதிர்க் கூச்சல் போட்டு அவரது நல்லுபதேசம், ஜனங் களின் காதில் விழாதபடி குழப்பம் விளைவிக்கின்றனர்.

இவ்வாறு, அந்தத் தூய நபிக்கு, மதியிலா மாந்தர் இடையூறு விளைவித்து, எதிர்ப்பும் ஏளனமும் செய்துகொண்டிருக்கும்போது, வெகு தொலைவிலிருந்து ஒரு எளிய மனிதர் ஓடோடியும் வருகின்றார். அருகில் வந்து, அந்த நபியின் பக்கத்தில் நின்று மரியாதை செய்கின் றார். பிறகு அதம ஜனங்களை நோக்கி, "ஏ பட்டணவாசிகளே,

ஊர்காரர்களே, இச்செயல் அடாதகாரியம். இவர் சத்தியவந்தர். இறைவனுடைய திருத்தூதர். இவர் சொல்வதெல்லாம் உண்மை. இவரது வார்த்தைகளில் நம்பிக்கை வையுங்கள். இவர் சொல்லும் வழிப்படி நடந்து கொள்ளுங்கள். இவரைப் பின்பற்றி ஒழுகுங்கள், இதனால் உங்களுக்கு இம்மையிலும் மறுமையிலும் மிகுந்த பிரயோஜனம் உண்டாகும்” என்று எடுத்துரைக்கின்றார்.

‘இவர் யாரடா, இந்தப் பிரசங்கிக்குத் துணையாக வந்தவர்?’ என்று ஜனங்கள் திகைப் படைகின்றனர். அதில் சில முக்கியஸ்தர்கள், அப்போது ஓடோடியும் வந்து சேர்ந்த புதிய மனிதர் யார் என்று கண்டு கொள்கின்றனர்.

“ஓ இவனா, இவன் அதோ வெகுதொலைவில் உள்ள கிராமத்தில் வசிக்கும் பேர்வழியல்லவா? மரம் அறுத்துச் சீவி இணைத்து தச்சுவேலை செய்கிறவ னல்லவா, இவன்? இவன் பெயர்தான் ஹபீபு! இவன் நோயாளியாய், குஷ்டரோகியாய் கிடந்தானே! திடீரென்று எப்படி சௌக்கிய தேகி யாகி விட்டான். ஆச்சரியமாய் இருக்கிறதே” என்று வியப்படைகிறார்கள்.

ஜனங்கள் ஆச்சரியப்படலாம், வியப்படையலாம். ஆனால், ஆண்டவனின் திருத்தூதராகிய நபி அலைஹிஸ்ஸலாம் ஆச்சரியப்படவில்லை. பிரமிப்பு அடையவில்லை. அவர் யார் என்பது அந்த நபிக்குத் தெரியும். நேற்று முன் தினம் திரு நபியவர்கள், அந்த கிராமத்துக்குப் போயிருந்தார்கள். அங்கு இந்த மனிதன், குஷ்டரோகத்தால் பீடிக்கப்பட்டு, தச்சு தொழில் செய்யவும் கைகால் சௌக்கிய மில்லாமல் கிடந்தான். திரு நபியைக் கண்டதும் மரியாதை செய்தான். திரு நபியை அணுகி, தனக்கு ஆசீர் மொழி கூறுமாறு வேண்டினான். எல்லாம் வல்ல இறைவனிடம், ஏக தெய்வத்தினிடம் தனக்குள்ள பக்தியையும், ஈமானையும் தெரிவித்துக் கொண்டு, தனக்காக துஆ செய்யுமாறு வேண்டிக் கொண்டான். அன்று அவ்வாறே, திரு நபியவர்கள், அவனது நிலைமைக்கு இரக்கப்பட்டு, கையேந்தி ஆண்டவனிடம் பிரார்த்தனை செய்து விட்டு வந்தார்கள்.

அவன் பரிபக்குவமான உள்ளம் படைத்த தூயவன் ஆனான். அவனது உடலில்-தேகத்தில்-சருமத்தில் வியாதி யிருந்த போதிலும் மனத்தில் ஆரோக்கியம் குடி கொண்டிருந்தது. அந்த ஆத்ம ஆரோக்கிம் தான் ஈமான். மனதில் தெளிவும் ஒளியும் உள்ளவன்

ஆத்ம ஞானி. அவன் இயற்கையாகவே, சன்மார்க்க சீலன்; உத்தமச் செயலுடையவன். அவன் மனம் பரிசுத்தம் அடைந்திருந்ததைப் போல், அவன் தேகமும் சௌக்கிய மடைந்து விட்டது.

வஜாஅ மின் அக்ஸல் மதீனத்தி ரஜுலுன்ய் யஸ்ஆ..." ஓர் ஆண் மகன் பட்டணத்துக்கு வெகு ஓரத்தி லிருந்து (கிராமத்தி லிருந்து), ஓடோடியும் வந்து, 'ஏ ஜனங்களே, இத்தகைய ரஸூல்மார்களுக்கு வழிபடுங்கள். (எதிர்ப்பு செய்யாதீர்கள்). இவர் உங்களுக்கு நன்மை செய்ய வந்தவர்; இதோபதேசம் கூறி சன்மார்க்கத்துக்கு வழி காட்டுகின்றார்; ஆகையால் இவரைப் பின்பற்றி ஒழுகுங்கள்; இங்ஙனம் ஒழுகி நடப்பவர்கள் தான் சன்மார்க்கம் என்னும் ஹிதாயத்து பெற்ற உத்தம சீலர்கள்" என்று அந்த உத்தமன், திரு நபிக்கு சிபாரிஷ் மொழி கூறுகின்றான். மேலும் :-

"வமா லிய லா அஃபுதுல் லதீ பத்தரனீ வ இலைஹி துர்ஜஊன்..." "என்னைப் படைத்தானே அந்த (ஏக) இறைவனை நான் வணங்கித் தொழா திருக்க, எனக் கென்ன நேரிட்டு விட்டது? (அப்படி ஒன்று மில்லை). அவ்விறைவனிடம் தான் (நானும்) நீங்க ளெல்லோரும் (மரித்து) திரும்பிப் போய் சேர வேண்டும்; அருளாளனான (றஹ்மா னாகிய) இறைவனை விட்டு, வேறு (போலித்) தெய்வங்களையா நான் பின் பற்றி உழல்வேன்..." என்று அந்த உத்தம கிராம வாசி அறுதி யிட்டு உறுதி கூறுகின்றான்.

அன்பர்களே, அல்லாஹ்வின் திருமறை வாக்கியங்களின் கருத்தை உணர்ந்து பாருங்கள்; அதனுள் செறிந்து கிடக்கும் அரிய தத்துவங்களைச் சிந்தித்துப் பாருங்கள். இந்த அரிய உதாரணத்தில் மனதைப் பதிய வைத்துப் பாருங்கள்.

நபிகள் நாயகம் முஹம்மத் ரஸூலுல்லாஹி (ஸல்) அவர்க ளுடைய புனித ஜீவிய காலத்தில் இப்படிப்பட்ட சம்பவங்கள் பல நிகழ்ந்துள்ளன. நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், முதன் முதல் மக்கா நகரத்திலும், தாயிப் என்ற கிராமத்திலும் தான் 'தஃவத்தே இலல் ஹக்' என்னும் 'ஏக தெய்வ வணக்கத்தின் அழைப்பை' பிரசாரம் செய்தார்கள். மக்காவில் வாழும் குறைஷ் குலக் காபிர்களுக்குத் தான் முதலில் சத்தியத்தை எடுத்துப் போதித்தார்கள். 'ஏக தெய்வ வணக்கம்' என்னும் தவ்ஹீதுக் கொள்கை, பல நூறு போலித்

தெய்வங்களையும் விக்கிரஹங்களையும் பூஜித்து வணங்கி வந்த குறைஷ் குலக் காபிர்களுக்கு, செவியில் நாராசம் காய்ச்சி ஊற்றியது போலிருந்தது. திரு நபியின் போதனையை எதிர்த்தார்கள். ஏளனம் செய்தார்கள். தீங்கு இழைத்தார்கள். துன்பங்கள் கொடுத்தார்கள்.

யார் யார் உள்ளங்களில் தூய்மையும் நற்பாக்கியமும் குடி கொண்டிருந்ததோ அவர்கள், சத்திய சன்மார்க்கப் போதனைக்கு செவி மடுத்தார்கள்; உண்மையை நம்பி ஈமான் கொண்டார்கள். இஸ்லாம் என்னும் சுத்த சத்திய சன்மார்க்கக் கோட்டையில் பிரவேசித்தார்கள். இம்மையிலும் மறுமையிலும் நற்கதி யடைந்தார்கள். மதீனாவின் குக்கிராமங்களி லிருந்தும் சில ஏழை எளிய அரபுகள், நபிகள் பெருமானார் முஹம்மத் நபி (ஸல்) அவர்களின் திருச்சமுகத்தில் வலிய, ஓடோடியும் விரைந்தும் வந்து ஈமான் கொண்டு முஸ்லிமானார்கள்.

சோதரீர், நபிகள் நாயகம் முஹம்மத் (ஸல்) அவர்களுடைய உற்றார் உறவினர்களுக்கு (அபூஜஹலுக்கு) கிடைத்திராத ஹிதாயத் என்னும் இஸ்லாமிய பாக்கியம், எங்கேயோ குக்கிராமத்தில் கிடந்த அரபு நாட்டின் மிகத் தாழ்த்தப்பட்ட ஜாதியினராகிய ஹபஷி (கறுப்பு) ஜாதியினரில் ஒரு 'அற்ப' மனிதரான பிலால் (ரலி) என்பவருக்கு கிடைத்தது. என்னே, இஸ்லாத்தின் மகிமை!

இதுவே நற்பாக்கியம்; இது தான் ஆத்ம சாதனம். யாருடைய நஸீபில் ஈமானும் தக்வாவும் அருள் புரியப்படுமோ அவர், இயற்கையாகவே உத்தம சீலராகவும் பகவத் பக்தராகவும் முத்தகியாகவும், உண்மை முஸ்லிமாகவும் விளங்குவர். இத்தகைய நற்பாக்கியத்தை, எல்லாம் வல்ல இறைவன், நம்மெல்லோருக்கும் அளித்தருள் புரிவானாக. ஆமீன்: யாறப்பல் ஆலமீன்!

# ஏ மானிடனே! அல்லாஹ்வைப் பயந்து கொள்.

( J. சலாஉத்தீன், கோட்டார். )

அல்லாஹ்வின் அடிமையே! அதிகாரமிக்க அல்லாஹ்வை அஞ்சி அடிபணிந்து—அடங்கி நடந்து கொள்வதோடு அவனையே வழிபாடு செய்துகொள்.

இம்மையிலே அவன் ஜாதி, மத, பேதம் பாராது உலக மக்கள் அனைவரும் தன்னடியார்களென நினைத்து எல்லோருக்கும் (முஸ்லிம், முஸ்லிம் அல்லாதார்) ஒருங்கே உதவி செய்யும் உத்தமன். ஆனால் மறுமை சுகத்தை அனுபவிக்க அவன் மீது விசுவாசம் கொண்டவர்களுக்கு மாத்திரம் தான் ஆண்டவன் அனுமதி யளிப்பான் என்ற உண்மை நீ அறியாததல்ல. ஆதலால்—

ஏ முஸ்லிமே! நீ மறுமை சுகத்தை அனுபவிக்க வேண்டுமானால்—சுவனபதியை அடைய வேண்டுமானால்—சுவனபதியின் சுகந்தத்தை நுகர வேண்டுமானால்—நரகத்தின் கொடிய வேதனையை விட்டும் தப்பித்துக்கொள்ள வேண்டுமானால்—சுவனபதியிலே உலக தீர்க்கதரிசியான எம்பிரான் முஹம்மது முஸ்தபா றஸூல் (ஸல்) அவர்களது திருமணத்திருநாளன்று அவர்கள் வெண்யானை மீதேறிப் பவனி வரும் அக்கண் கொள்ளாக் காட்சியைக் கண் குளிரக் கண்டு களிக்க வேண்டுமானால் உலக ஆசாபாசங்களை உன்னில் நின்றும் அகற்றிவிடு. அதிகாரமிக்க அந்த அல்லாஹ் (ஜல்)வையே நீ பயந்து வணங்கிக்கொள்.

ஏ மானிடனே! நீ இவ்வுலகிலே படைக்கப்பட்டது எதற்காக? உலக ஆசாபாசங்களிலே சிக்கிச் சீரழிவதற்காகவா? அன்றி நாயனில்லை என்று நவிலும் நாஸ்திக நாசகாலிகளுடன் சேர்ந்து நாசம் முறுவதற்காகவா? அன்றி முஹம்மது நபி (ஸல்) அல்ல இறுதி நபி, மிர்ஸா குலாம்தான் இறுதி நபி என பீத்தித்திரியும் 'காதியானி'க் கயவர்களின் கட்சியிலே சேர்ந்து கெட்டொழிவதற்காகவா? அல்ல. அல்ல. நீ இவ்வுலகிலே படைக்கப்பட்டது, நம் எல்லோரையும் படைத்து, அளித்து அழிக்கும் வல்லமையுடைய அந்த அல்லாஹ்வையே தொழுது அவனது அருளைப் பெறுவதற்காகத்தான். உலகத்தவரனைவரையும் ஆட்டிப்படைக்கும் வல்லமையுடைய நாயன் ஒருவன் உண்டு. அவன் தூதர்தான் முஹம்மது நபி (ஸல்). அவர்கள் தான் இறுதி நபி. எனினும் உள்ள உறுதியுடனேயே நீ இவ்வுலகில் செயல்பட வேண்டும்.

ஏ மனிதனே! உலகிலே உன்னை நீயே அளவு கடந்த கஷ்டத்துக்குள்ளாக்கி வைத்து விட்டாய். அதுவோ துக்கத்தையும், சஞ்சலத்தையும், வருத்தத்தையும், கவலையையும், பீடைகளையும் உடைய ஒரு வீடாக இருக்கின்ற நிலையிலே மேலும் அல்லாஹ்வின் பாத்யதைகளைச் சீர்கெடுத்து விட்டாய், அதைப்பற்றி நீ சிந்திக்காதவனாகவும், அறிந்து கொள்ளாதவனாகவும், விளங்கிக் கொள்ளாதவனாகவும் இருக்கின்ற நிலையிலே.

அல்லாஹ்வால் ஆணித்தரமாக விலக்கப்பட்ட 'ஹறாம்'மானவற்றை 'ஹலா'லாகக் கொண்டு சகல விதமான 'ஹறாம்'மான செய்கைகளையும் மனங்கூசாது செய்துவரும் மாபாபியே! அல்லாஹ்வின் பயத்தால் ஒவ்வொரு நாளும் அழுது அழுது கண்ணீர் விட்டுக்கதறிக் கொண்டிருக்கிறார்களே ஒரு கூட்டத்தார்! அத்தகைய திருக்கூட்டத்தினரை விட்டு விட்டு நீ எங்கே இருந்து கொண்டிருக்கிறாய்?

'நாம் உருவாக்கப்பட்டதும் நம்முடனேயே நமது கபன் புடவையும் உருவாக்கப்பட்டிருக்கும்' என்ற உண்மையை சில சமயங்களில் கூட சிறிது நேரம் சிந்தித்துப் பார்க்காமலிருக்கும் சீர் கெட்டவனே! பொழுது புலர்ந்ததும் இரவு எப்பொழுது வரும் இன்பக்கனவுகள் பல காணலாம். படுக்கையின் சுகத்தை அனுபவிக்கலாம் என்றெல்லாம் எண்ணிக் கொண்டு இரவையே எதிர்நோக்கிய வண்ணம் பகலவனைப் பழித்துக் கொண்டிருக்கும் படுபாவியே! இரவு வந்து விட்டதும் தங்களுடைய விலாப்புறங்கள் படுக்கையின் சுகத்தையனுபவிப்பதை விட்டும் உலர்ந்து போயிருக்கின்றதே, அன்னார்களை விட்டு விட்டு நீ எங்கே இருந்து கொண்டிருக்கிறாய்?

'ஆகிற'த்துக்கு வேண்டிய தங்கரியப் பொருட்களைச் சேர்த்துக் கொள்வதை விட்டும் தரித்திரனா யிருக்கும் பரம ஏழையே! உன்னை எக்கேடு ஆட்கொண்டிருக்கிறது? உனது வாலிப முறுக்கின் தூண்கள் தகர்ந்து விட்டிருக்கின்ற நிலைமையில் உலகில் என்றென்றும் தரிபட்டிருப்பதை நீ ஆசைப்படுகிறாய்.

ஏ! உனது கபன் துணிக்கு வேண்டிய நூற்கள் நூற்கப்பட்டு சேகரிக்கப்படுகின்ற நிலைமையில் உலக ஆசாபாசங்களிலும் வீண் விளையாட்டுக்களிலும்—கேலிக் கூத்துகளிலும் ஈடுபட்டு உழன்று கொண்டிருப்பவனே! 'ஜும்ஆ'க்கள் தோறும் அரிய உபதேசங்களை நீ செவி மடுக்கின்றாய். ஆயினுமென்ன? அவ்வரிய அறிவுரைகளைக் கேட்பதற்கு இயலாத செவிலியோ? அன்றி அறிய முடியாத அறிவிலியோ? அன்றி ஊமையோ? என ஐயங்கொள்ளத்தக்க முறையில் உனது நடை, உடை, பாவனை இருந்து கொண்டிருக்கிறது. எனவே 'அமல்'களைச் சூறையாடுவதற்குத்தக்க சமயம் வாய்த்திருக்கும்போதே படைத்தவனிடம் உனது பரிசுத்த ஹிருதயத்தை பயபக்தியுடனே

திறந்துகாட்டி பாவ மன்னிப்பு தேடிக்கொள். 'கியாம' நாளையிலே திருமறையோனின் திருச்சமுகத்திலே நீ நிறுத்தப்படுவதும் சிறிய பெரிய பல விஷயங்களைக் குறித்தும், நீ உணவாக அருந்திய ஒவ்வொரு விதைகளைக் குறித்தும், நீ செலவு செய்த ஒவ்வொரு பைசாக்களைக் குறித்தும், நீ போக்கிய ஒவ்வொரு விநாடிகளைக் குறித்தும், நீ இவ்வுலகிலே நடந்த நடத்தையின் ஒவ்வொரு விதத்தைக் குறித்தும் விசாரணை செய்யப்படுவது நிச்சயம் நடந்தே தீரும். அச்சமயம் யாருக்கும் நீ அநீதம் செய்யவும் முடியாது. நீ அநீதம் செய்யப் படவுமாட்டாய். அப்பால் உனது உறைவிடம் உத்தமர்கள் சுகானந்தம் அனுபவிக்கக்கூடிய சுவனபதியாகவு மிருக்கலாம். அன்றி ஒரு வித திருகு கள்ளியை உணவாகவும் புண்களிலிருந்து வழியும் ஜலத்தையும், ஊனையும் குடிப்பாகவும் அமைக்கப்பட்டிருக்கும் பயங்கர நரகலோகமாகவு மிருக்கலாம். எனவே அல்லஹ்வைப் பயந்துகொள்வதையே நீ அவசியமாக்கிக்கொள். உன் 'நப்ஸி'ல் 'ஸாலி'ஹான 'அமல்'களை முப்படுத்தி வைத்துக்கொள். அப்பொழுது நீ 'அதா'பெனும் தெய்வ தண்டனையை விட்டும் ஈடேறக்கூடும்.

ஏ பாவியே! நரகத்தின் நடுவிலே 'சிரூத்' என்னும் பாலத்தைப் போடப்பட்டு மனிதர்களின் நன்மை தின்மைகளை நிறுக்கக் கூடிய 'மீஸான்' எனும் தராசையும் தூக்கப்பட்டு அநியாயம் செய்தவனே அப்பாலத்தின் மீது செல் என்றும் அநியாயம் இழைக்கப்பட்டவனே உனக்கு நியாயம் வழங்குகிறவரையில் இங்கேயே நில் என்றும் உத்தர விடப்படும்பொழுது நான் இப்பொழுது கூறக் கூடியவற்றின் உண்மையை உணர்ந்து கொள்வாய். அப்பொழுது அழைக்கப்படுகிறவன் நல்லவர்கள் கூட்டத்தைச் சார்ந்தவனாக இருப்பானேல் சோபனம் பெற்று புன்முறுவல் கொள்வான். அவன் தீயோர்கள் கூட்டத்தைச் சார்ந்தவனாக இருப்பானேல் தன் வாழ்நாளை வீணாக்கியதைக் குறித்து அழுது அழுது கண்ணீர் சிந்திக் கைசேதமுறுவான். அவ்விடத்திலே அநீதர்களை அவர்களின் அடையாளங்களைக் கொண்டே அறிந்து கொள்ளப்படும். அவர்களின் முன்னெற்றி ரோமங்களைப் பாதங்களோடு இணைத்துக் கட்டப்படும். நல்லடியார்களுக்கு மகத்துவம், இன்பம் என்னும் ஆபரணங்களை அணிவிக்கப்படும். ஆதலால்—

ஏ மானிடனே! நீ அல்லாஹ்வைப் பயந்து தொழுவதையே அன்றாட வேலையாக்கிக்கொள்.

# பத்ஹுர் ரஹ்மான் பில்பிக்ஹின் ஹுஃமான்

(ஹனபி மதுஹபுக்குரியது)

பிரயோஜனமான கல்வி, பிரயோஜன மில்லாத கல்வி என்று இரண்டு வகையுண்டு. உலக வாழ்வை மட்டும் நமக்கு எடுத்துச் சொல்வது பிரயோஜன மில்லாத கல்வி. நம் மனமும் ஒழுக்கமும் சீர்பெற்று மறுமையில் நமக்கு ஈடேற்றம் தரக்கூடியதே பிரயோஜனமான கல்வியாகும்.

தீனுல் இஸ்லாத்தின் தத்துவங்களையும், அனுஷ்டான ஒழுக்க முறைகள் என்னும் பிக்ஹு மஸ்அலாக்களையும் கற்றறிந்து அமல் செய்ய வேண்டியது ஒவ்வொரு முஸ்லிமுடையவும் கடமையாகும். இதுதான் இம்மை, மறுமை இரு லோகத்திலும் பிரயோஜனம் தரவல்லது.

இந்தநூலில் ஒவ்வொரு முஸ்லிமும் அறிந்து ஒழுக வேண்டிய எல்லா விஷயங்களும் அடங்கி யிருக்கின்றன. உதாரணமாக ஈமான், இஸ்லாம், கலிமா, பரிசுத்தம், தொழுகை, ஜும்ஆ மகிமை, ஜியாரத்துல் குபூர், ஜக்காத்து, நோன்பு, ஹஜ்ஜு முதலிய மஸ்அலாக்களும், இஸ்லாமிய ஒழுக்கம், ஸுன்னத்தின் சிறப்பு, ஸபருடைய ஒழுக்கம், இபாதத்தின் மகிமை மற்றும் சகலவிதமான போதனைகளும் அடங்கி யிருக்கின்றன.

நல்ல சுத்த தமிழில் இனிய நடையில் எழுதப்பட்ட புதிய நூல்—புதிய பதிப்பு. ஆங்கு அரபு மொழியில் ஓத வேண்டிய கலிமா, துஆ முதலானவைகள் அறபிலேயும் அமைக்கப்பட்டுள்ளன. இதன் அருமை நேரில் பார்த்தால் தான் தெரியும்

இதன் விலை ரூ. 3—0—0

ஷை அறபுத் தமிழ் அல்பத்ஹுர் றப்பானி-பி-பிக்ஹே நிஃமானி

விலை ரூ. 5—0—0

---

கிடைக்குமிடம் :—

ஹாஜி எம். எ. ஷாஹுல் ஹமீது அண்டு ஸன்ஸ்,

நெ. 20, ஹைரோட், திருவல்லிக்கேணி, மதறாஸ் 5.

(23-வது பகுதி)

# திருக் குர்ஆன் : : : :

## : : : : சார சங்கிரஹம்

### பல விஷயங்கள் பற்றிய பல ஆயத்துகள்.

(ரஹ்மத் பாகவி)

## பிள்ளை யூஸுப் நபி—தந்தை யாகூப்நபியின் அரிய சந்திப்பு.

(எகிப்து சுற்றுப்புற தேசத்தில் பஞ்சம் ஏற்பட்டு விட்டது; யூஸுப் (நபி)யுடைய சகோதரர்கள் அரசாங்க சகாய தானியம் வாங்கிக்கொண்டு போவதற்காக, கன்ஆனிலிருந்து எகிப்து பட்டணத்துக்கு வந்தார்கள்; அப்போது, அதிபதியாயிருந்த யூஸுப் (நபி)யை அவர்கள் அடையாளம் கண்டு கொள்ள முடியவில்லை. ஆனால், யூஸுப் நபியோ, அவ்வனைவரையும் நன்கு தெரிந்துகொண்டு விட்டார். எனினும் தன்னை இன்னார் என்று பகிரங்கப்படுத்திக் கொள்ளாமல் அவர்களுடன் பரஸ்பரம் சமத்துவமாக நடந்து கொண்டார். சகோதர வாஞ்சையினால் ஒரு தந்திரம் செய்தார். அதாவது. அவர்களில் தன்னுடைய தாய்வழி சகோதரரான 'புன்யாமீன்' என்பவரை மட்டும் ஓர் உபாயம் புரிந்து, தன் ஜாகையிலேயே வைத்துக் கொண்டார்.)

(அங்கு, தந்தை யாகூப்(நபி)அவர்கள், தம் அருமைப் புதல்வர் யூஸுப் காணமற் போனதனால், அல்லும் பகலும் அழுது புலம்பி கண் கலங்கி, கண் குருடாகிப் போயிருந்தார். இதர பிள்ளைகள் இப்போது புன்யாமீனையும், போக்கடித்து வந்ததை யறிந்து பெருங் கவலையி லாழ்ந்தார்.)

"எனவே யாகூப் நபி,(தம் இதர புதல்வர்களை அழைத்து)நீங்கள் இன்னொரு முறை எகிப்து (பட்டணத்து)க்குப் போங்கள். அங்கு யூஸுபையும் அவனுடைய தம்பி புன்யாமீனையும் தகவல் கண்டு பிடியுங்கள். ஆண்டவனுடைய நல்லருள் (ரஹ்மத்) மீது அவநம்பிக்கை கொள்ளாதிர்கள். ஏனெனின் விசுவாசமற்ற காபிர்கள்தான் ஆண்டவனுடைய நல்லருள் (றஹ்மத்) மீது அவநம்பிக்கை கொள்வார்கள்" என்று சொல்லி அனுப்பினார்.

அதே பிரகாரம் (சகோதரர்களாகிய) இவர்கள், (எகிப்துக்கு வந்து) யூஸுபுடைய சமுகத்தை அடைந்தனர். (அதிகாரி) யூஸுபை (பேட்டி) கண்டு, "ஏ எகிப்தின் பேரதிகாரியே, எங்கள் ஊர்க் குடும்பத்தார் மீது (கொடிய பஞ்சத்தால்) படுங் கஷ்டங்கள் ஏற்பட்டுள்ளன. (தானிய தினுசு வாங்கிப்போவதற்காக) நாங்கள் கொண்டு

வந்திருந்த காசு பணங்களும் மிகவும் சொற்பமேயாகும். ஆயினும் (நாங்கள் கொடுக்கும் காசு குறைவாக இருந்தபோதிலும் அதைப் பொருட்படுத்தாமல்) எங்களுக்குப் பூர்த்தியான அளவுப்படி (சகாய விலை) தானியம் கொடுத்துதவக் கோருகிறோம். இதைத் தாங்கள் எங்களுக்கு தானதர்மமாக (கைராத்தாக) கொடுத்தாலும் சரியே; தான தர்மம் புரிபவர்க்கு இறைவன் நிறைய புண்ணியம் கொடுத்தருள்வான்'' என்று (மிக விநயமாக) வேண்டிக் கொண்டார்கள்.

(யூஸுப் நபி, தன்னுடைய (நயவஞ்சக) சகோதரர்களுக்கு இன்னனம் விவேகம் பிறந்து, இறைவன் நாமம் கூறி நல்லுபதேசம் புரிவதைக் கேட்டுப் பெருமித மடைந்துவிட்டார்.) எனவே, யூஸுப் (அன்னவர்களை நோக்கி) "ஏ (அதமர்களே!) நீங்கள் உங்கள் மடமைத்தனத்தினால் சகோதரன் யூஸுப் விஷயத்திலும் அவர் தம்பி புன்யாமீன் விஷயத்திலும் என்ன விதமான செயல் புரிந்தீர்கள், நினைத்துப் பாருங்கள்'' என்று (இடித்துக்) கூறினார். (குடும்ப சம்பந்தமான இந்தப் பரம ரகசியம் இந்த அதிகாரிக்கு எப்படி தெரிந்து விட்டதென்று அவர்கள் திக்பிரமை யடைந்தனர்.) எனவே அவர்கள் "ஏ, (அதிகாரியா யிருப்பவரே,) நீவிரே தான் அந்த யூஸுப் (என்பதை நாங்கள் உணர்ந்து கொண்டோம்)'' என்று கூறலானார்கள். அதற்கு யூஸுப் (நபி) "ஆம். நான் தான் அந்த யூஸுப்; இவன் தான் என் தாய்வழித் தம்பி புன்யாமீன்; (இதில் சந்தேகமில்லை). (எல்லாம் வல்ல) இறைவன் எங்கள் மீது (கிருபா) கடாக்ஷம் புரிந்துள்ளான். சந்தேகமில்லை; எவர் ஆண்டவனுக்குப் பயந்தொழுகி, பொறுமை அனுஷ்டிப்பாரோ (அவரே நன்மையடைவார்;) அந்த நல்லவர்களுக்குரிய நற்கூலியை ஆண்டவன் வியர்த்தமாக்கவே மாட்டான்'' என்று (அறிவுறுத்திக்) கூறினார்.

அதற்கு மேலும் அவர்கள் (யூஸுபை நோக்கி) "ஆண்டவன் மீது ஆணையாக, இதை ஒப்பிக் கூறுகிறோம். இறைவன், உம்மை எங்களைவிட மகா சிரேஷ்டராக ஆக்கி வைத்துள்ளான்; இதில் சந்தேகமில்லை. உண்மையில் (துரோகம் செய்த) நாங்களே மிகவும் குற்றவாளிகள்.(எங்களை மன்னிப்பீராக)'' என்று கோரிக்கொண்டனர்.

அதற்கு யூஸுப் (நபி) "ஓ, அப்படியானால் (நீங்களே உங்கள் குற்றங்களை மனதார ஒப்புக்கொள்வதால்) உங்கள் மீது எத்தகைய பழிபாவமும் கிடையாது. (நீங்கள் செய்த பாதகங்களை நான் மன்னித்து விட்டேன்.) ஆதலால், ஆண்டவனும் உங்கள் பாபங்களை மன்னிப்பான். ஏனெனின் அவன் தயாளர்களி லெல்லாம் மகா தயாளனாக இருக்கின்றான். இந்தாருங்கள், எனது இந்த அங்கியை (சட்டையைக்) கொண்டு போங்கள். இதை எனது தகப்பனாரின் முகத்திலே (போட்டு கண்ணில்)படவையுங்கள்; இதனால் (அவருக்கு கண் பார்வை திரும்பவந்து விடும்.) அவர் பார்க்கத் தொடங்குவார்.

அதன்பின் அவருடன் என் குடும்பத்தார் அனைவரையும் அழைத்துக் கொண்டு என்னிடம் எகிப்துக்கு வாருங்கள்'' என்று கூறி (அறிவுறுத்தி) அனுப்பி வைத்தார்.

(சுருங்கக் கூறுமிடத்து: யூஸுஃப் நபியுடைய சகோதரர் கூட்டத்தினர், அதிபர் யூஸுஃபுடைய போதனையின் படி நடந்து கொள்வான் வேண்டி, எகிப்து நகரை விட்டு தங்கள் கன்ஆன் ஊருக்குப் போய்க் கொண்டிருந்தார்கள். இங்கு இந்தக் கூட்டம் எகிப்தை விட்டுப் புறப்பட்ட வுடனேயே, அங்கு (கன்ஆனில்) யூஸுஃபின் தந்தை யாகூப் (நபி) தீர்க்க திருஷ்டியால் உணர்ந்து, தம் குடும்பத்தாரிடம்: "என்னைப் பயித்தியம் பிடித்தவன் என்று கருதாதிர்கள். எனக்கு இப்போது (எனது செல்வக் குமாரன்) யூஸுஃபுடைய (ஸபரிச) நறுமணம் வீசுகின்றது. (அதாவது யூஸுஃபுடைய செய்தியை யான் உணர்கிறேன்)'' என்று கூறலானார்.

எனினும் அவரது (குடும்ப) ஜனங்கள், இதைக் கேட்டு, "தாங்கள் தங்கள் பழைய சித்தப் பிரமையிலேயே சிக்குண்டு கிடக்கிறீர்கள்; (பிதற்றுகிறீர்கள்)'' என்று (மறுத்துக்) கூறி விட்டனர்.

அதன் பிறகு, (யூஸுஃப் உயிருடன் இருக்கிறார்; தூது அனுப்பி யிருக்கிறார் என்ற) சுபச் செய்தியைக் கொண்டு வந்தவர் (சகோதரர் கூட்டம்) வந்து சேர்ந்ததும், (பெரிய பிள்ளை யாண்டான்), தான் கொண்டு வந்த அங்கியை, (தந்தை) யாகூபுடைய முகத்தில் போட்டான்; (தடவினான்). அப்போதே அவர் மீண்டும் கண் பார்வை பெற்றுக் கொண்டார். மேலும் (தன் குமாரர்களை நோக்கி) "நான் உங்களுக்கு இவ்வாறு தான் (நிகழு மென்றும், யூஸுஃபுடைய செய்தி கிடைக்கு மென்றும்) முன்னரே சொல்லி வைக்கவில்லையா ? நீங்கள் அறிய வியலாத விஷயங்களை நான் அறிய வல்லவனாக இருக்கிறேன்''-என்று கூறினார்.

அதற்கு (குமாரர்கள் மனமொத்து) "ஏ எங்கள் கௌரவம் மிக்க தகப்பனாரே! நாங்கள் (செய்து விட்ட) எங்கள் பாபங்களுக்காக, அல்லாஹ்விடம் தாங்கள் மன்னிப்பு கேட்டு அருளுங்கள். உண்மையாகவே நாங்கள் மிகவும் குற்றவாளிகள்''—என்று விண்ணப்பித்துக் கொண்டார்கள்.

அதைக் கேட்டு (தந்தை யாகூப் நபி, பிள்ளைகளை நோக்கி) "சரி, கூடிய சீக்கிரம் நான் உங்களுக்காக என்னுடைய இறைவனிடம் மன்னிப்பு கேட்கப் போகிறேன்; நிச்சயமாக அவனே (எல்லோர்) பாபங்களையும் மன்னிக்கும் மகா தயாநிதியாக இருக்கின்றான்'' என்று ஆறுதல் மொழி கூறினார்கள்.

அதன் பிறகு (யூஸுஃப் நபியின் திட்டம் பிரகாரம், தந்தை யாகூப் நபியுடன், குடும்பத்தார் அனைவரும் கூட்டமாய், எகிப்துப்

போய், யூஸுப் நபி உடைய ஸ்தலத்துக்கு வந்து சேர்ந்தார்கள்.) அங்ஙனம், இன ஜனங்கள், யூஸுப்பிடம் வந்து சேர்ந்த போது, (அதிகாரி) யூஸுப், நகருக்கு வெளி எல்லையிலேயே அவர்களுக்காக கூடாரம் அமைத்து, அவர்களை யெல்லாம் வரவேற்று உபசரிக்க ஏற்பாடு செய்தார். பிறகு தந்தையை (மட்டும்) தன்னுடைய சமுகத்துக்கு வரவழைத்து (தகுந்த) ஸ்தானம் கொடுத்து "தந்தையே நகருக்குள் பிரவேசித்து வாருங்கள். ஆண்டவன் நாட்டப் பிரகாரம் நீங்களெல்லோரும் சுகக்ஷேமமாய் இருப்பீர்கள்" என்று (வரவேற்று) அழைத்துப் போனார். மேலும், (எகிப்து தேச வழக்காசாரப்படி யூஸுப் நபி) தனது தாய் தந்தை இருவரையும் (அமோகமாக கௌரவப் படுத்துங் கருத்துடன்) மேடையின் மீது உயர்ந்த ஆசனத்தில் (அரியணையில்) அமர்த்தினர். (இந்த மகா உபசாரத்தைக் கண்ட சகோதரர்கள் மெய் உருகினர்); எனவே எல்லோரும் யூஸுப் நபிக்கு எதிரில் சிரம்பணிந்து ('ஸஜ்தா' கோலமாய்) விழுந்தனர். அப்போது யூஸுப் (நபி, தன் தகப்பனரை நோக்கி) "என் தந்தையே, (பாருங்கள்) இது தான் என்னுடைய (பால்ய காலக்) கனவின் தாத்பர்யம் (என்னும் தஃபீர்) ஆகும். (எல்லாம் வல்ல இறைவனுக்கு நான் நன்றி செலுத்துகிறேன்;) அவன் என்னுடைய கனவை மெய்ப்படுத்தி வைத்தருளினன். அவ்வல்லோன் என்பால் (அதிகாரப் பதவியும் தந்து) மிகமிக நன்றியை புரிந்தருளினன். அப்போதே இறைவன் என்னை, சிறையி லிருந்து மீட்டு அருளினன். மேலும் அவனே (பிரிந்த) உங்கள் எல்லோரையும் இங்கு (என் முன்) கொண்டு வந்து சேர்த்து வைத்தான். அப்போது எனக்கும் என் சகோதரர்களுக்கு மிடையில் ஷைத்தானனவன் விரோதத்தைப் போட்டு (பிரித்து) வைத்தான். (இறைவன் அருளால் இப்போது அத்தொல்லை எல்லாம் தீர்ந்தது) நிச்சயமாக, எனது இரக்ஷகனுக்கு எது இஷ்டமோ அதன் படியே செய்கின்றான். அவன் தன் நாட்டங்களின் முடிவை நன்கு உணர்கின்றான். ஏனெனின், அவன் எல்லாம் ரகசியங்களையும் நன்கறிந்திருக்கிறான்; அவன் மகா விவேகமுடையவனாகவும் இருக்கின்றான்" (என்று சமாதான மொழி கூறி, இவ்வாறு பிரார்த்தனையும் செய்தார்கள் :—

(பிரர்த்தனையாவது:—) "ஏ எனது இரக்ஷகனே, (ரப்புல் ஆலமீனே!) நீ எனக்கு அரசாக்ஷிப் பதவியை அளித்தாய்; நீயே என் (பால்யகால) கனவுகளை உண்மையாக்கி அருள் புரிந்தாய். ஏ, வானங்களையும் பூமிகளையும் (அண்டசராசரங்களையும்) சிருஷ்டிப்பவனே! நீயே இம்மையிலும் மறுமையிலும் என்னுடைய காரியாதிகளை (செவ்வனே) நிறைவேற்றி வைப்பவனாய் இருக்கிறாய். (எனது இறுதிப் பிரார்த்தனை யாதெனில்:) என்னை இஸ்லாத்திலேயே மரணிக்கச் செய்வாயாக; என்னை நல்லோர்களில் சேர்த்து எழுப்புவாயாக" (என்பதாகும்). (ஸூரா—யூசுப்; ருகூஃகள் 10, 11, 12)

# நபிகள் நாயகம் (ஸல்) அவர்களும் குர்ஆனின் நல்லுபதேசமும்.

## (இரண்டாவது பாகம்)

### குவலயத்தோர்க்கு குர்ஆன் ஷரீப் கூறும் செய்தி.

வேதாகமங்களிடம் கிறிஸ்தவர்கள்கொண்டிராதஅளவுகுர்ஆன் ஷரீபிடம் முஸ்லிம்கள் மதிப்பும் மரியாதையும் காட்டியதில் காரண மில்லாமலில்லை. குர்ஆன் ஷரீபில் பொதிந்துள்ள சிறப்புத் தன்மை களில் இரண்டை இங்கு இயம்புவோம் : இறைவனைப் பற்றி இயம்பும் பொழுது பக்திப் பரவசமும் பயமும் பயங்கரமும் ஊட்டும் தோரணை யில் இறை மறையின் நடை அமைந்துள்ள ; குவலயத்தோரின் குற்றங் குறைபாடுகளும் ஆசாபாசங்களும் விருப்பு வெறுப்புகளும் கடவுளுக்குக் கற்பிக்கப்படவில்லை. அல்குர்ஆனின் அருமை பெருமை களில் இது ஒன்று. இழிவான, அபாசமான கருத்துக்களும் கதை களும் கோட்பாடுகளும் இல்லாதிருப்பது இறை மறையின் இரண் டாவது சிறப்பு. யூத வேத கிரந்தங்களில் ஆபாச அம்சங்கள் நிறைந் திருக்கிற தென்பது நினைவு கூறத்தக்கது. எனவே, எந்த வித இழிவும் இழுக்கும் இல்லாமையால் ஆரம்பத்தி லிருந்து கடைசி வரை இறை மறையை இனிது ஓதி இன்பம் பெறலாம்.

அவனியில் அல்குர்ஆன் அமைத்த நிலை நிறுத்திய மதமான இஸ்லாம் கடுமையான ஏக தெய்வ நெறியாகும். இறைவனைப் பற்றி இல்லாத, பொல்லாத கருத்துக்களைக் கொண்டிராமல் பகுத்தறிவுக்குப் பொருத்தமான கருத்துக்களையே குர்ஆன் ஷரீப் கூறுகிறது. தத்துவ ஞானத்தில் கூறப்படுவது போல நிலை நிறுத்தப் பெற்ற சட்டதிட்டங் களுக்கு உட்பட்டு, கட்டுப்பட்டு பிரபஞ்சத்தை ஒழுங்கு படுத்தும் முழு முதற் காரணமாக இல்லாமல், எங்கும் நிறைந்த, எல்லா முணர்ந்த எல்லா சக்தியுமுள்ள எழில் மிகு ஏந்தலென இறைவனை இறைமறை வர்ணிக்கிறது. சர்ச்சைக்கிட மில்லாத, சத்திய சன்மார்க்க மாகத் திகழும் இஸ்லாத்தில் இரகசியம் எதுவுமில்லை. படித்த பண்டிதர்கள் முதல் பாமரர்கள் வரை உணர்ந்து கொள்ளுமளவு எளிய, நளின நடையில் அல்குர்ஆன் அமைந்திருக்கிறது. பகுத் தறிவுக்குப் படுகுழி தோண்டாமலும் சிந்தனை சக்திக்குச் சிறை விதிக்

காமலும் அறிவுக்குகந்த அபிப்பிராயங்களையே அல்குர்ஆன் தெரிவிக்கிறது. வீர வணக்கம், விக்கிரக வழிபாடு, வனவாசம், துறவறம் ஆகியவற்றுக்கும் அருமறை தடை விதித்திருக்கிறது. இயற்கையின் இரகசியமும் இயல்பும் உலக சமுதாயங்களின் போக்கும் நிலையும் அல்குர்ஆனுக்கு அஸ்திவாரமாக அமைந்துள்ளன. மார்க்க கடமைகள் பகுத்தறிவோடு மோதிக் கொள்ளா வண்ணம் மெச்சத்தகுந்த கொள்கை, கோட்பாடுகளைக் கொண்டது புர்கான்.

எந்த மதத்தின் கொள்கை, சித்தாந்தங்களிலும் குர்ஆன் ஷரீப் தலையிடவில்லை; எந்த மதத்தினரையும் அடக்கி யொடுக்கவில்லை. இவ்வையத்தோர்க்கு இஸ்லாத்தை போதித்ததேயன்றி மக்கள் மீது மதத்தை மாண்புறு மறை திணிக்கவில்லை. மதத்திலே பலவந்தம் (பலாத்காரம்) இருக்கலாகாது என்று இறைமறை இயம்புகிறது. "நிச்சயமாக, முஸ்லிம்களும் யூதர்களும் கிறிஸ்தவர்களும் ஸாபியர்களும்—இறைவன் மீதும் இறுதித் தீர்ப்பு நாளின் மீதும் விசுவாசம் கொண்டு நற்கருமங்களைப் புரிபவர்கள் அவர்களோ அவர்கள்—அவர்களது இறைவனிடம் சன்மானம் பெறுவர்; அவர்களை எந்த விதமான பயங்கரமும் அணுகாது; அவர்கள் சஞ்சலப்பட வேண்டியதுமில்லை." என்பது இறைமறையின் இன்னொரு வசனம்.

வள்ளல் நபி (ஸல்) அவர்களை எதிர்த்து வாளேந்திப் போர் புரிந்து தோற்றுப் போனவர்களும் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டு முஸ்லிம்களோடு சம உரிமையும் அந்தஸ்தும் பெற்றனர். வாகை மாலை சூடியவர்கள் விதிக்கக் கூடிய நிபந்தனைகளி லிருந்தும் அவர்கள் அதன் மூலம் விடுதலை பெற்றனர். சுற்றுப்புற நாடுகளில் பழக்கத்திலிருந்து வந்த சிசு வதைக்கு இஸ்லாம் முற்றுப் புள்ளி வைத்தது. அடிமைத் தன்மை முதலிய கொடிய பழக்கங்களையும் இஸ்லாம் ஒழித்துக் கட்டியது. இஸ்லாத்தைப் பின்பற்றியவர்களுக்கும் இஸ்லாத்தை எதிர்த்துத் தோற்றுப் போனவர்களுக்கு மிடையே எவ்வித வித்தியாசமும் அல்லது விகற்பமும் பாராட்டாமல் பாரபக்ஷமற்ற நீதியை குர்ஆன் வழங்கியது. மக்கள் மீது சுமத்தப் பெற்றிருந்த வரிச்சுமையும் குறைக்கப் பெற்றது ; அரசாங்கம் பத்திலொரு பாகம் மட்டுமே மக்களிட மிருந்து கோரிப்பெற்று திருப்தி யடைந்தது. தடைகளையும் தடங்கல்களையும் அகற்றி வாணிபம் தழைத்தோங்கச் செய்தது. மற்றெந்த மதத்துக்கும் மாசு கற்பிக்காத மாண்புறு மதமாம் இஸ்லாம், இறை மதத்தை ஏற்றுக் கொள்வோரிடம் வற்புறுத்திய தெல்லாம் ஒரே ஒரு வாக்கியம் தான். இஸ்லாம் என்னும் அறிவுப் பெட்டகத்தின் திறவு கோலாகத் திகழ்ந்த திரு கலிமா இது தான்: லா இலாஹ இல்லல்லாஹ் முஹம்மதுர் ரசூலுல்லாஹ் (வணக்கத்துக்குப் பாத்திரமானவன் அல்லாஹ்வை யன்றி வேறு யாரும் கிடையாது. முஹம்மது (ஸல்) அவனது தூதர்)

பிரசித்திப்பெற்ற ஆங்கில கவி மில்டன் சொல்லுகிறார். "கான்ஸ்டன்டைனுக்கு வெகுகாலத்துக்கு முன்பே கிறிஸ்தவர்களில் பெரும்பாலார் அவர்களது கோட்பாட்டிலும் நடத்தைகளிலும் புராதனப் புனிதத் தன்மையையும் ஒழுக்கத்தையும் இழந்து விட்டிருந்தனர். பின்னர், மத ஆலயத்தை அவர் செம்மைப்படுத்திச் செழிப்பாக்கியதும் அவர்கள் கௌரவம் பதவி வேட்கை கொள்ளத் துவங்கினார்கள். இதனால் கிறிஸ்தவமதம் நாசமுற்றது." கி. பி. ஆறாவது நூற்றாண்டிலே அரேபியாவில் அவதரித்த அண்ணல் அஹ்மது நபி (ஸல்) அவர்கள் ஆசியா, ஆப்ரிக்கா, எகிப்து ஆகியவற்றின் பெரும் பகுதிகளில் விக்கிரக வழிபாட்டையும் வணக்கத்தையும் நிர்மூலமாக்கி, ஏக தெய்வ கோட்பாட்டை நிலைநிறுத்தினார்கள். அல்லாஹ்வின் அருளால் அவர்கள் உபதேசித்த அந்த உண்மை வணக்கமுறை உலகில் இன்றும் நிலைபெற்றிருக்கிறது.

உம்மி நபி (ஸல்) உலகிற்கு உபதேசித்த உண்மை மதத்தின் உன்னத மேன்மை, உயர்வு ஆகியவற்றை ஊர்ஜிதம் செய்வதாக இருப்பது இதுதான். காலப்போக்கிலே மற்ற மதங்களுக்கு நேர்ந்தது போல சிருஷ்டிகர்த்தாவின் ஸ்தானத்தில் சிருஷ்டிப் பொருளைப் போற்றிப் பூஜிக்கும் இழிநிலை இஸ்லாத்துக்கு ஏற்படவில்லை. புலன்களுக்கும் புத்திக்கும் உட்பட்ட அழியுந்தன்மையுள்ள, அற்ப பொருட்களை வணக்கத்துக்குப் பாத்திரமானவைகளாகப் பாவித்து விடாமல், பாருலகைப் படைத்து, பராமரித்து, பாதுகாத்து, பரிபூரணமும் பரிபக்குவமு மடையச் செய்யும் பரமதயாளனும் பக்தரட்சகனுமாகிய பரம் பொருளையே முஸ்லிம்கள் வணங்கி வழிபட்டு வருகிறார்கள். வீர வணக்கம், விக்கிரக வழிபாடு மூலம் அல்லாஹ்வின் அந்தஸ்தைக் குறைத்துப்பழித்து விடாமல் மூடபழக்க வழக்கங்களுக்கும் மூடநம்பிக்கைகளுக்கும் முஸ்லிம்கள் பலியாகாமல் இருந்து வருகிறார்கள். "அஷ்ஹது அன்லாஇலாஹ இல்லல்லாஹ், வஅன்ன முஹம்மதுர் ரசூலுல்லாஹ்" (வணக்கத்துக்கு இலாயக்கானவன் அல்லாஹ்வைத் தவிர வேறுயாரும் இல்லை; முஹம்மது (ஸல்) அவனது தூதர் என்று நான் சாக்ஷியம் சொல்லுகிறேன்" என்ற மந்திர உச்சாடனம்தான் இஸ்லாத்துக்கு நுழைவுச்சீட்டு.

பழிக்குப்பழிவாங்கும் இரத்த வெறிகொண்ட இரக்கமில்லா அரக்கர்களிடையே அன்பும் அருளும் பெருக்கெடுத்தோடச் செய்த

தும் சண்டை, சச்சரவுகளி லீடுபட்டிருந்த சண்டாளர்களிடையே சமாதானமும் சகிப்புத்தன்மை மிளிரச் செய்ததுமான குர்ஆன் ஷரீப், குவலயத்துக்கொரு அருட்கொடையாகவும் ஆசீர்வாத மாகவும் இருக்கிறது என்பதை ஏற்றுக்கொள்ளமறுப்பவர் எவர்? நானிலத்திலே நாகரிகம் தழைத்தோங்கச்செய்த அல்குர்ஆனின் அவசியத்தை, அருமைபெருமையை அறைகூவி அழைப்பவர் எவர்? வையத்தோரின் வளமிகு வாழ்வுக்கு வழிகோலும் வல்லோனின் சட்டதிட்டங்களைக் கொண்ட சிறப்புறு குர்ஆனைச் சிறுமைப் படுத்துபவர் எவர்? இருளுக்குப் பதில் அருள் நிலைபெறச்செய்த அருமறையின் அகமியத்தை அறிந்தோர் அனைவரும்—இஸ்லாத்தின் எதிரிகள்கூட—குர்ஆன் ஷரீபின் மேன்மையை எடுத்துரைக்கத் தயங்கியதில்லை.

(தொடரும்.)


# இரத்தச் சின்னம்

## இது திடுக்கிடும் சம்பவங்கள் நிறைந்த ஒரு துப்பறியும் நாவல்.

சிரச்சேதம் செய்யப்படுவதினின்று சீர்கெட்ட குற்றவாளி யொருவன் தற்செயலாகத் தப்பிப் பிழைத்திராவிடில், இரத்தச் சின்னம் என்னும் இரகசியக் குழு இயங்கத் துவங்கி இராது. நீதி பரிபாலனத்தில் பரிதவிக்கத்தக்க முறையில் நிகழ்ந்த இந்த அசம்பா விதத்துக்குச் சில வருடங்களுக்குப் பிறகு இரக்க சிந்தையற்றவனொருவன் இங்கிலாந்தில் இரகசிய நடவடிக்கைகளில் ஈடுபடலானான். தீர்க்க ஆலோசித்து திட்டமிட்டுத் திறமையோடும் தீரத் தோடும் செயலாற்றுவதன் மூலம் தனக்கு உதவியாளர்களாக ஏராளமான ஆட்களைச் சேகரித்துக் கொண்டான் அவன். ஒருவருக்கொருவர் பரஸ்பர பழக்கமில்லாமலும் அறிமுக மில்லாமலும் அதியற்புதச் செயல்கள் புரிந்த இந்த இரகசியக் குழுவிற்குத் தலைமை தாங்கிய மர்ம மனிதன் இரத்தச் சின்னம் என்று கையெழுத்திட்டான்.

அவனின் மர்ம இரகசியத்தைக் கண்டு பிடித்தல் மிக ஆச்சரியமானது. இதன் விலை ரூ. 1—4—0

கிடைக்குமிடம் :—

ஹாஜி எம். எ. ஷாஹுல் ஹமீது அண்டு ஸன்ஸ்
கெ. 20, ஹைரோட், திருவல்லிக்கேணி, மதராஸ் 5.

# *ஏ மா ற் ற ம் !*

**மாஸ்டர் ஹாரிஸ் பாபு**

**வீ**ட்டினுள்ளிருந்து வெளியே வந்த ஸலீம் பாஷாவின் பார்வை தற்செயலாக எதிர் வீட்டின் ஜன்னல் பக்கம் தாவியது. அந்த ஜன்னல் வழியாக இரண்டு கரும், பெரும் விழிகள் அவனை நோக்கிக் கொண்டிருந்தன. அந்தப் பக்கம் சென்ற அவன் பார்வை மீண்டும் அவனிடம் மீளவில்லை; மீட்டுக் கொள்ள அவன் விரும்பவுமில்லை. ஏனெனில் அவனை நோக்கிக் கொண்டிருந்த அந்த இரண்டு கண்களும் ஒரு பெண்ணின் முகத்தில் பதிந்திருந்தன.

ஒரு சில விநாடிகள் தன்னை மறந்து ஆடாமல், அசையாமல், கண்ணைச் சிமிட்டாமல் அந்த ஜன்னலழகியைப் பார்த்துக் கொண்டிருந்து விட்டான் ஸலீம். அவன் கையின் இரண்டு விரல்களுக் கிடையே புகைந்து கொண்டிருந்த சிகரெட்டின் நெருப்பு அவன் விரலைத் தொட்டது. அப்பொழுதுதான் அவன் உணர்ந்தான், நடுத் தெருவில் நின்று கொண்டு அயலார் வீட்டு ஜன்னலை முறைத்துக் கொண்டிருக்கிறோம் என்று. பிறகு யாரும் தன்னை கவனிக்கிறார் களோ எனத் தன் பார்வையை நாற்புறமும் சுழற்றிப் பார்த்தான். யாரும் தன்னை கவனிக்கவில்லை என்றறிந்து மீண்டும் தன் பார்வை அம்பை அந்த ஜன்னலை நோக்கி எய்தினான். அந்த அம்பு ஜன்னலை ஊடுருவிச் சென்று எதிர்பட்ட சுவற்றில் மோதியது. பின்னே! சற்று முன்பிருந்த பெண்மான் அங்கிருந்திருந்தால் அவன் விழி வில்லிலிருந்து புறப்பட்டுச் சென்ற அம்புக்கு இலக்காகி இருக்கும். அந்தப் பெண்மான்தான் அங்கிருந்து எப்பொழுதோ மறைந்து விட்டதே.

ஏமாற்ற மடைந்த ஸலீம் 'அவள் யார்? எங்கேயோ பார்த்த மாதிரி இருக்கிறாளே, எங்கே பார்த்தோம்?' என்று சிந்தித்துக் கொண்டே கடைத் தெருவுக்கும் போகாமல் திரும்பி வீட்டுக்குள் நுழைந்தான், அவளைப் பற்றிய விஷயங்களைக் கேட்டுத் தெரிந்து கொள்ள.

ஸலீம் பாஷா நடுத்தர குடும்பத்தில் பிறந்தவன். உடல் கட்டும், முக வெட்டும் நன்றாக அமையப் பெற்றவன்; கல்யாணம் ஆகாதவன். பெற்றோர்களுக்கு ஒரே பிள்ளை. S. S. L. C. யோடு தன் படிப்பை முடித்துக் கொண்டு வேலை தேடி சென்னைக்குச் சென்றவன்; ஓராண்டுக்குப் பின் அன்றுதான் தன் ஊருக்குத் திரும்பி இருந்தான்.

வராந்தாவில், அவன் அன்னை கதீஜா பீ எதையோ தைத்துக் கொண்டிருந்தாள். அவன் தங்கை பாத்திமுன்னிஸா லேஸ் பின்னிக் கொண்டிருந்தாள்.

“போஸ்ட் மேன் இந்தப் பக்கம் எத்தனை மணிக்கு வருவார்?” என்று கேட்டபடி அங்கிருந்த நாற்காலியில் அமர்ந்தான் ஸலீம்.

“வரும் நேரமாயிடுத்து, இப்போ வந்திடுவார்” என்றாள் கதீஜா பீ.

‘அந்தப் பெண் யாருன்னு எப்படிக் கேட்பது’ என்று யோசித்துக் கொண்டிருக்கும் போது, “இந்த தபாலை இங்கே கொடுத்துடுன்னு தபால்காரர் கொடுத்தார்” என்று கூறி ஒரு எட்டு வயது சிறுவன் ஒரு போஸ்ட் கார்டை ஸலீம் கையில் கொடுத்தான்.

“உன் அத்தா இடமிருந்து கடுதாசி வந்ததா ஷபீர்? எப்போ வர்றதா எழுதி இருக்கிறார்?” என்று வந்த சிறுவனைப் பார்த்துக் கேட்டாள் கதீஜா பீ.

“தபால் வந்தது, எப்போ வர்றாரோ தெரியாது” என்று கூறி விட்டு அந்தச் சிறுவன் போய் விட்டான்.

“யாரம்மா பையன்?” ஸலீம் கேட்டான் அன்னையைப் பார்த்து.

“நம்ம சபியா புவ்வா மகன்” கதீஜா பீ பதிலளித்தாள்.

“நம்ம சபியா புவ்வா என்றால் உமக்கு அக்காவா, தங்கச்சியா?” கேலி சிரிப்புடன் கேட்டான் ஸலீம்.

“மூணு வருஷத்துக்கு முன்னே நாம் ஆற்காட்டில் இருந்தப்போ நம்ம வீட்டுக்குப் பக்கத்து வீட்டில் சபியா புவ்வான்னு ஒருத்தர் இருந்தாங்களே, நினைவிருக்கிறதா?”

“நினைவிருக்கிறது. இப்போ அவங்க எங்கே இருக்கிறாங்கோ?”

“எதிர் வீட்டில்தான்”

‘அப்படியானால் சற்றுமுன் ஜன்னலில் தோன்றி நம் உள்ளத்தைப் பறித்து சென்ற அந்த பேரழகி நம்முடன் படித்த சபியா புவ்வாவின் மகள் உம்மஹானியாகத்தான் இருப்பாள்’ என்று யூகித்துக் கொண்டு இறந்த காலத்தை—சிறு பிராயத்தில் அவளுடன் ஓடிப் பாடி விளையாடியதை—நினைத்துப் பார்த்தான் ஸலீம். அவன் முகத்தில் மகிழ்ச்சி ஒளி வீசிற்று. அதைத் தொடர்ந்து ஒரு கேள்விக் குறி படிந்தது. அவனையும் அறியாமல் அந்தக் கேள்வி வாய் வெளியாக வந்தும் விட்டது. “சபியா புவ்வாவின் மகள் உம்மஹானிக்குக் கல்யாணம் ஆகி விட்டதா?”

அப்போது கதீஜா பீ அடுப்படிக்குச் சென்று விட்டிருந்தாள். லேஸ் பின்னுவதிலே கண்ணுங் கருத்துமாக இருந்த பாத்திமுன்னிஸா, அவனுடைய கேள்வியைச் செவியுற்று, தலை நிமிர்ந்து, அவனை அர்த்த புஷ்டியுடன் நோக்கி விட்டு “ஓ! ஆகி விட்டதே”

என்று சாதாரணமாகப் பதிலளிப்பதைப் போல் கூறினாள். அதைக் கேட்டதும் அவன் முகத்தில் ஏமாற்றக் களை பளிச்சிட்டது. அதை அவள் கவனிக்காமல் இல்லை. ஆனால் அவன், அவனுடைய நிலையை அறிந்து கொண்டு அவள் குறும்பாக புன்முறுவல் உதிர்ப்பதை கவனிக்கவில்லை. சிறிது நேரத்தில் கதீஜா பீ அங்கே வந்தாள். "ஸலீம், சபியா புவ்வாவின் மகள் உம்ம......" கதீஜா பீ முடிக்க வில்லை. பாத்திமுன்னிஸா குறுக்கிட்டாள்.

"இப்பொழுது அதைப்பற்றி எதுவும் கேட்கவேண்டிய அவசிய மில்லை. நான் கேட்காமலேயே கேட்டு அண்ணாவின் அபிப்பிராயத்தை அறிந்து கொண்டு விட்டேன்" என்று கூறி தன் புன்முறுவலை நீடிக்க விட்டாள்.

"சம்மதம் தானே, ஸலீமுக்கு?" கதிஜாபீ கேட்டாள்.

"பூர்ண சம்மதம்தான். நிச்சயதார்த்தம் பண்ணி கல்யாணத்தை முடிக்கவேண்டியதுதான் பாக்கி" பாத்திமுன்னிஸா கூறினாள்.

"கல்யாணமா, யாருக்கு? நீங்கள் பேசிக்கொள்வது எனக்குப் புரியவில்லையே!" ஸலீம் கூறினான்.

"நம்ம சபியாபுவ்வாவுக்கு ஒரு மகள் இருந்தாளே, உம்மஹா னின்னு, மருந்துட்டியா?" கதீஜாபீ கேட்டாள்.

"அவளுக்குத்தான் கல்யாணமாகி விட்டதாமே"

"யார் சொன்னது?"

பாத்திமுன்னிஸாவை சுட்டுவிடுவதைப் போல் பார்த்தான் ஸலீம்.

"ஆம். நான்தான் சொன்னேன். இவருடைய சம்மதத்தைத் தெரிந்துகொள்ளத்தான் அப்படிச் சொன்னேன். அவளுக்கு மணமாகி விட்டதென்று சொன்னதும் இவருடைய முகம்மாறியதைப் பார்க்க வேண்டுமே!"

"அப்போ......அவளுக்கு இன்னும்......கல்யா...ணம்......ஆக வில்லையா?" அவன் வாயிலிருந்து வார்த்தைகள் தட்டித் தடுமாறிக் கொண்டு வந்தன.

"அந்தப் பெண்ணுக்குக் கல்யாணமும் ஆகவில்லை. ஒன்னுமில்லை. உனக்குத்தான் அந்தப் பெண்ணைக் கேட்டு வைத்திருக்கிறோம். உன் சம்மதத்தைத்தான் எதிர்பார்த்துக் கொண்டிருந்தோம்" என்றாள் கதீஜாபீ.

"உங்க விருப்பப்படியே செய்யுங்கள்" என்று கூறிவிட்டு வெளியே சென்று விட்டான், ஸலீம்.

ரபீக் அஹ்மத் தன்னறையில் ஏதோ சிந்தித்தவண்ணம் நாற் காலியில் வீற்றிருந்தான். அவன் வாய்க்குள் செல்லும் 'கோல்ட் பிளேக்' சிகரெட்டின் புகை வளையங்களாக உருவெடுத்து, வெளிவந்து

அந்தரத்தில் தவழ்ந்து கொண்டிருந்தது. ஆழ்ந்த சிந்தனையில் மூழ்கி விட்டிருந்த அவனுக்கு கரீம் வந்ததும் தெரியவில்லை.

ரபீக் அஹ்மதுக்கு எத்தனையோ நண்பர்கள் இருக்கின்றனர். இருந்தாலும், கரீம்தான் அரசருக்கு யோசனை கூறும் அமைச்சரைப் போல், அவனுடைய நெருங்கிய அந்தரங்க நண்பன்.

தொண்டையைக் கனைத்து கொடுத்து விட்டு "ரபீக்," என்றான் கரீம்.

"ஊம்......கரீம், எப்போ வந்தே?" சிந்தனையிலிருந்து விடுபட்ட ரபீக் கேட்டான்.

"இப்பொழுதுதான் வந்தேன். என்ன பலமான யோசனை?" கரீம் கேட்டான்.

"ஒண்ணுமில்லே, என் அத்தை மகள் உம்மஹானி இருக்கிறாளே, தெரியுமா?"

"ஓ! தெரியுமே. இப்ப என்ன அவளுக்கு?"

"அவ என்னைக் கட்டிக்க மாட்டேன் என்று சொல்கிறாளாம்"

"ப்பூ! இதற்காகவா இத்தனை யோசனை! நான் என்னமோ பிரமாதமான காரியமாக இருக்கும் என்றல்லவா நினைத்துக்கொண்டேன்"

"அத்தனை பிரமாதமான காரியம் அல்ல என்றாலும் நீ நினைப்பதைப்போல் அவ்வளவு லகுவில் முடியக்கூடிய காரியமுமல்ல"

"அட என்ன பிரதர்! பணத்திற்காக எத்தனையோ அழகுள்ள குட்டிகளெல்லாம் உன் காலடியில் வந்து விழுகின்றன என்றால், இவ எந்த மூலை!"

"அவதான் என்னைக் கட்டிக்கொள்ள மாட்டேன் என்று கண்டிப் பாகச் சொல்லி விட்டாளாமே"

"'பணம் பத்தும் செய்யும்' என்பார்களே, அந்தப் பணம் அவள் மனதை மாற்றாதா?"

"பணத்தாலும் முடியாது பணத்துடைய பாட்டனாலும் முடியாது அவள் மனதை மாற்ற"

"அவள் உன்னைக் கட்டிக்க மறுக்கிறாள் என்று உனக்கெப்படித் தெரியும்?"

"நான் சொன்னதின் பேரில் என் தாயாரும், சகோதரியும் போய் எனக்கு அவளைப் பெண் பேசினார்கள். பெண்ணைப் பெற்ற அந்தப் பெரிய மனுஷி—என் அத்தை—சொல்கிறாளாம், 'உம்மஹானிதான் ரபீக்பாவைப் பண்ணிக்க மாட்டேன் என்று சொல்லி விட்டாளே நாம் என்ன செய்வது' என்று"

"உன் தந்தை என்ன சொல்கிறார்?"

"அவருடைய குணம்தான் உனக்குத் தெரியுமே! கட்டிக்கொள்கிறவளுக்கே இஷ்டமில்லை என்றால் நாம் என்ன செய்கிறதுப்போல் இருக்கிறது' என்று கூறிவிட்டாராம் என் தந்தை"

"ரபீக்! அவள்தான் பிடிவாதக்காரியாக இருக்கிறாளே......"

"அதனால்தான் அவள் என் மனைவியாக வரவேண்டும் என்கிறேன்! அவள் பிடிவாதக்காரி மட்டுமல்ல, கர்வத்தின் பிரதிபிம்பம் கூட! இல்லாவிட்டால் அவள் அப்படிச் சொல்லி இருப்பாளா"

"என்ன சொன்னாள் ?"

"நான் குடிகாரனாம்; பெண் மயக்கியாம். நான் ஒரு முஸ்லீமாக மட்டுமல்ல, மனிதனாக இருக்கவும் தகுதியற்றவனாம். ஊம்......எவ்வளவு திமிர் அவளுக்கு! "

"உன்னையா அப்படிச் சொன்னாள் !"

"ஆமாம்; என்னைத்தான் அப்படி வர்ணித்தாளாம் ! அதனால் தான் அவளை எப்படியாகிலும் மணந்து கொண்டு, அதன் பிறகு அவள் கர்வம் அடங்கும்வரை வாட்டிவதைக்க வேண்டும்; சித்ரவதை செய்யவேண்டும் என்பது என் ஆசை"

"அவள் அப்படியெல்லாம் பேசியதைக் கேட்டுக் கேட்டுக் கொண்டு நீ சும்மாவா இருந்தே?"

"என்னெதிரில் அவள் சொல்லவில்லை. 'நீ ஏன் என்னை மணந்து கொள்ள மறுக்கிறாய்' என்றெழுதி நம் வீட்டு வேலைக்காரியிடம் கொடுத்தனுப்பிக் கேட்டேன். அதற்கவள் அப்படிச் சொல்லி அனுப்பி இருக்கிறாள்"

"நீ ஏன் வேலைக்காரியிடம் கேட்டனுப்பினாய், ரபீக்?"

"வேறு மார்க்க மில்லை"

"ரபீக்! எதற்கும் நீயே நேரில் போய் அவள் என்ன சொல்கிறாள் என்று தெரிந்து கொண்டு வாயேன்"

"என் அவகண்ணுக்கு நான் கொஞ்சம் மதிப்பா இருக்கிறேன்; அதையும் அங்கே போய்க் கெடுத்துக்கச் சொல்றியா! அவ படித்த பெண்ணுப்பா, என்னை மதிப்பில்லாமல் பேசி தான் அனுப்புவாள்."

"இல்லை ரபீக், அவள் உன்னிடம் அப்படி யெல்லாம் மதிப்பு குறைவாக நடந்து கொள்ளமாட்டா. நீ போய் ஒரு வார்த்தைகேட்டு விட்டே வந்து விடு. அவ முடிவா என்ன சொல்கிறாள் என்று தெரிந்து கொண்டு அதன் பிறகு என்ன செய்ய வேண்டு மென்பதை யோசிக்கலாம்" என்று கூறினான் கரீம். (தொடரும்)

# பாத்திமா நாயகி (ரலி)
# ஜீவிய சரித்திரம்

இச்சரித்திரத்தில் ஹஜ்றத் பாத்திமா நாயகி அவர்களின் மாதாவாகிய உம்முல் மூஃமினீன் கதீஜா நாயகி அவர்களின் வம்ச பரம்பரையும், அவர்களின் பிறப்பும், பாத்திமாநாயகியின் பிறப்பும், பால்யகால அறிவும். பரஸ்பர அன்பும், நாயகியின் திருக் கலியாணமும், அவர் தம் வீட்டில் குடித்தனம் நடத்தி வந்த ஒழுங்கும், தனது பர்த்தாவாகிய அலியாருக்கு இணங்கி நடந்த அழகும், அவர்களின் தயாள சிந்தையும், உழைப்பும், ஆண்டவன் மீது பக்தியும், வணக்கமும், கபூலாக்கப்பட்ட துஆவும், ரஸூலுல்லாவுக்கு பாத்திமா நாயகியின் பால் இருந்து வந்த அன்பும், நாயகிக்கு தம் தந்தையின் பால் இருந்து வந்த பிரியமும் அவர்களின் நாணம், அடக்கம், அச்சம் முதலிய ஒழுக்கங்களும், இமாம் ஹஸன் ஹுஸைன் றலியல்லாஹு அன்ஹுமா அவர்களின் மேம்பாடும், நாயகி யின் வபாத்தும் விபரமாய்க் கூறப்பட்டிருப்பதுடன் இந்நா யகியின் ஜீவிய சரித்திரத்தில் நம் சகோதர சகோதரிகளுக்கு அரிய போதனைகளும் அடங்கி யிருக்கின்றன. ஒவ்வொரு முஸ்லிமும் இச்சரிதையை வாசித்துணர வேண்டியது மிக்க அவசியமாகும். கிளேஸ் காகிதம் இதன் விலை ரூ. 1—8—0

ஷை அறபுத் தமிழ் விலை ரூ. 2–14—0

# வல்லப நாச்சியார்

இது துப்பறியும் ஓர் இனிய நாவல். படிக்கப் படிக்க மிக ருசிகரத்தையும் ஆனந்தத்தையும் கொடுக்கக் கூடிய அழகியகதை. விலை ரூ. 1—9—0

---

கிடைக்குமிடம் :—

ஹாஜி எம். எ. ஷாஹுல் ஹமீது அண்டு ஸன்ஸ்,
நெ. 20, ஹைரோட், திருவல்லிக்கேணி, மதராஸ் 5.

# இஸ்லாமிய சரித்திரச் சாரம்.

ஹிஜ்ரீ 64-லிருந்து 100-வரை

(டி. எப். ஆர். மஆலி ஸாஹிப்-பாகவி)

## ஹிஜ்ரீ-64:

கொடியோன் யஜீது பின் முஆவியா, இவ்வாண்டில் இறந்து போய் விட்டான். அவனுடைய மகன், "இரண்டாவது முஆவியா" என்ற நாமம் தாங்கிக் கொண்டு கிலாபத் பதவியில் அமர்ந்து கொண்டான். ஆனால் இரண்டே மாதங்களுக்குப் பின். பாவம், இறந்து போய் விட்டான். எனவே, ஷாம் தேசப் பிரஜைகள், மர்வான் பின் ஹக்கம் என்பவரை தங்கள் நான்காவது கலீபாவாக தேர்ந்தெடுத்துக் கொண்டார்கள்.

(2) மக்கமா நகரின் கண், அப்துல்லா பின் ஜுபைர் (றலி), தானே கலீபா என்று பிரகடனப்படுத்திக் கொண்டார். இராக், ஹிஜாஸ், மிஸ்ர் (எகிப்து) ஜனங்கள் இவரது கிலாபத் பதவியை ஏற்றுக் கொண்டார்கள்.

(3) ஹஜ்ரத் நுஃமான் பின் பஷீர் (றலி) இறந்து போனார். இப்பெரியார் தான் மதீனாவாழ் அன்ஸாரி முஸ்லிம்களில் முதலில் ஜனனமான முதன்மை யானவராவார்.

## ஹிஜ்ரீ-65:

(1) மர்வான் பின் ஹிக்கம் என்பார், அதிக்கிரமமாக இப்னு ஜுபைர் மீது படையெடுத்து தாக்கினார். மிஸ்ர் என்னும் எகிப்தை ஆக்கிரமித்துக் கொண்டு, அங்கு தன்னுடைய மகனை அப்துல் மலிக் இப்னு மர்வானை, எகிப்துடைய கவர்னராக (அதிகாரியாக) நியமனம் செய்து கொண்டார். ஆண்டவனின் சோதனைக்காளாகி அதே ஆண்டு மர்வான் இப்னு ஹிக்கம் இறந்து போய் விட்டார்.

(2) அதிகார பீடத்தில் இருந்த அப்துல் மலிக் இப்னு மர்வானுடனேயே, எகிப்து தேச மக்களும் ஷாம் தேச மக்களும், வலிய விசுவாசம் தெரிவித்துக் கொண்டு பைஅத்தும் செய்து கொண்டனர். இதன் பிரகாரம், அப்துல் மலிக் இப்னு மர்வான், பனு உமய்யா வம்சத்தின் ஐந்தாவது கலீபாவாக சுயமே அமர்ந்து ஆட்சி செய்யலானார்.

(3) அல்ஹாரிஸ் இப்னுல் அஃவர் (ரஹ்) அவர்கள், இவ்வாண்டு கூபாவில் இறந்து போய் விட்டார்கள். இப்பெரியார் ஹஜ்ரத் அலீ (ரலியல்லாஹு அன்ஹு) உடைய அருந்தோழர்களில் ஒருவரா யிருந்து வந்தார்.

## ஹிஜ்ரீ-66:

(1) கூபாவாசிகளி லிருந்து 6000 பேர்கள் சேர்ந்த ஒரு கூட்டத்தினர், தங்களை 'தவ்வாபீன்' என்று சொல்லிக் கொண்டு இஸ்லாத்

18757

தில் ஒரு தனிக் கட்சியாகத் தோன்றி இராக் தேசத்தில் தங்கள் பிரசாரத்தைத் தொடங்கினர்கள். இவர்கள், இமாம் ஹுஸைன் (ரலி) கொல்லப்பட்டதற்கு பழிக்குப்பழி வாங்குவதென்ற லக்ஷியத்தை பகிரங்கமாய் விளம்பரம் செய்து, ஷாம் மீது இவ்வாண்டு படையெடுத்துச் சென்றார்கள். ஆனல், கர்பலா மைதானத்துப் படுகொலைச் சம்பவங்களுக்கு மிகப்பெருங் காரண பூதனைகயிருந்த இப்னு ஜியாத் என்பான், தம்படை பலமும் அதிகாரச் செல்வாக்கும் கொண்டு, மிகக் கடுமையாய் எதிர்த்தான். இதனல் தவ்வாபீன்களின் கோஷ்டி அடக்கப்பட்டது; பழிக்குப்பழி என்ற லக்ஷியமும் மறைந்தது.

(2) ஹஜ்ரத் ஜைது பின் அர்கம் (ரலி) அவர்கள், இவ்வாண்டு கூபாவில் இறந்து போய் விட்டார்கள்.

## ஹிஜ்ரீ-67:

(1) ஹஜ்ரத் ஹதீ இப்னு ஹாத்திம் (ரலி) அவர்கள், தமது 120-ம் வயதில், கூபா என்ற இடத்தில், இவ்வாண்டு இறந்து போய் விட்டார்கள்.

(2) ஹஜ்ரத் அப்துல்லாஹ் பின் அம்ருல்ஆஸ் (ரலி) அவர்கள் பரிசுத்த மக்கமா நகரின் கண், இவ்வாண்டு இறந்து போனர்கள்.

(3) முக்தார் ஸக்பீ என்ற பலசாலி, இமாம் ஹுஸைனுக்காக பழிக்குப் பழி வாங்குவ தென்ற லக்ஷியம் மேற்கொண்டவராகி, 'தவ்வாபீன்' என்ற கோஷ்டியாரில் சேர்ந்து கொண்டார். அத்துடன் ஆட்பலம் கொண்டு வலிய கூபாவின் அதிகாரியாகி, ஹஜ்ரத் ஹுஸைனைக் கொன்றவர்கள் யார் யார் என்பதைத் துருவி ஆராய்ந்தார். இறுதியாய் சமயம் பார்த்து, இப்னு ஜியாத் என்ற கொடியோனின் தலையைக் கொய்து, அந்த சிரசை மட்டும், இமாம் ஹுஸைன் (ரலி) யுடைய புத்திரராகிய இமாம் ஜைனுல் ஆபிதீன் அவர்களுடைய சமுகத்துக்கு அனுப்பி வைத்தார். அந்தோ!

## ஹிஜ்ரீ-68:

(1) ஹஜ்ரத் அப்துல்லாஹ் இப்னு அப்பாஸ் (ரலி) அவர்கள், தமது 71-ம் வயதில், த்ரயிப் என்னும் இடத்தில் இறந்து போனர்கள்.

(2) நபிகள் நாயகம் முஹம்மத் ரஸூலுல்லாஹி (ஸல்) அவர்கள் காலத்தில் மக்கா நகரம் வெற்றிக் குள்ளாவதற்குமுன் பரிசுத்த தீனுல் இஸ்லாத்தில் சேர்ந்த ஸஹாபியாகிய ஹஜ்ரத் ஷரீஹ் (ரலி) அவர்கள் நெடுநாள் ஜீவித்திருந்த பின், இவ்வாண்டு புனித மதீன நகரில் இறந்து போனர்கள்.

(3) அப்துல்லாஹ் பின் ஜுபைர் (ரலி) யுடைய சகோதரன் முஸ்அப் இப்னு ஜுபைர், முன்னர் வைராக்கியம் கொண்டு இப்னு ஜியாதுடைய தலையை வெட்டி ஹஜ்ரத்து ஜைனுல் ஆபிதீன் சமுகத்

திற்கு அனுப்பி வைத்தாரே அந்த முக்தார் ஸக்பீ உடைய தலையை வெட்டி, அப்துல்லாஹ் பின் ஜுபைருடைய சமுகத்துக்கு அனுப்பி வைத்தார். அந்தோ!

## ஹிஜ்ரீ-69:

இப்னு ஜுபைர் என்பார் தம்முடைய சகோதரன் முஸ்அப் என்பானை—அவன் புரிந்த கொலைச் செயலுக்குப் பரிகாரமாக-அவனை இவ்வாண்டு இராக் தேசத்துக்கு கவர்னராக்கி விட்டார்.

## ஹிஜ்ரீ-70:

(1) கட்டுப்பாட்டில் அடங்காத காரிஜிய்யா கூட்டத்தார்கள், ஸ்தல ஆட்சிக்கு விரோதமாக புரட்சியைத் தொடங்கி விட்டார்கள். இந்த காரிஜிய்யாக்களை அடக்கி ஒடுக்குவதற்காக, இப்னு ஜுபைர் என்பார், மஹ்லப் என்பானுக்கு அதிகாரப் பத்திரம் அனுப்பினர். மஹ்லப், பெரும் படைகொண்டு காரிஜிய்யாக்களைத் தாக்கவே, காரி ஜிய்யாக்களால் தாக்குப் பிடிக்க முடியாமல், யுத்த மைதானத்தை விட்டு ஓட்டம் பிடித்து விட்டார்கள்.

(2) ஹிஷ்ஷாம் இப்னு அப்துல் மலிக் இந்த ஆண்டில்தான் பிறந்தார்; இன்னவரே, பின்னர் ஹிஜ்ரீ 108-ல் பனு உமய்யா வம்சத்தின் 10-வது கலீபாவாக ஆட்சி பாரம் செலுத்தினர்.

## ஹிஜ்ரீ-71:

(1) ஹிஜ்ரீ 101-வது ஆண்டில் பனு உமய்யாக்களின் 9-வது கலீபாவாகத் தோன்றிய யஜீத் இப்னு அப்துல் மலிக், இவ்வாண்டே பிறந்தார். இன்னவரே, பின்னர் "இரண்டாவது யஜீது" பட்டமும் பெற்று, இஸ்லாமிய சரித்திரத்தில் ஒரு தனி ஸ்தானம் பெற்றுக் கொண்டார்.

(2) அப்துல்லாஹ் இப்னு அபீ ஹத்ரத் என்ற பெரியார் தமது 81-ம் வயதில், மதீனு நகரில் இறந்து போனுர்கள்.

## ஹிஜ்ரீ-72:

(1) பனூ உமய்யா கோஷ்டியார், இராக் தேசத்தை ஆக்ரமித்துப் பிடித்து, அங்கு அப்போது ஆட்சி செலுத்திக் கொண்டிருந்த அதிகாரி முஸ்அப் என்பானுடைய தலையைவெட்டி வீழ்த்தி, அதை அப்துல் மலிக் உடைய சமுகத்துக்கு அனுப்பி வைத்தனர்.

(2) ஹிஜ்ரீ 172-ம் ஆண்டில் கிலாபத் பதவிக்கு வந்த பனு உமய்யாக்களின் 14-வது கலீபாவும் கடைசி கலீபாவுமாகிய மர்வானுல் ஹிமார் என்பார் இவ்வாண்டில்தான் பிறந்தார்.

## ஹிஜ்ரீ-73:

(1) அதிகாரி அப்துல் மலிக் என்பார், ஹஜ்ஜாஜ் பின் யூசுப் ஸக்பீ என்பானை, இப்னு ஜுபைர் (ரலி) அவர்களை எதிர்த்துத்

தாக்கி கொன்று விட்டு வரும்படி, மக்கா நகருக்கு அனுப்பி வைத்தார். இவ்வாண்டு இவனுக்கும் இப்னு ஜுபைருக்கும் நிகழ்ந்த சண்டையில், இப்னு ஜுபைர் (ரலி) அவர்கள், கொல்லப்பட்டு ஷஹீதாகி விட்டார்கள்.

(2) அதிகாரி அப்துல் மலிக் பின் மர்வான், சகல இஸ்லாமிய நாடுகளுக்கும் ஏக சக்ராதிபதிபோல் 'கிலாபத்' பெயரால் ஆட்சி புரிவதில் இவ்வாண்டு வெற்றி பெற்று விளங்கினர்.

(3) நபிகள் நாயகம் ரஸூலுல்லாஹி (ஸல்) அவர்களது ஜீவித காலத்தில் நிகழ்ந்த கைபர் யுத்தத்தில், இஸ்லாத்தின் பச்சை நிறத் துவிஜம் தாங்கி முன் சென்ற வீர ஸஹாபி அவுப் இப்னு மாலிக் (ரலி) அவர்கள், மதீனு நகரில், தமது 84-ம் வயதில், இவ்வாண்டு இறந்து போனர்கள்.

(4) கலீபா உமர் இப்னுல் கத்தாப் (ரலி) அவர்களின் புத்திரர் அப்துல்லாஹ் இப்னு உமர், இவ்வாண்டு இறந்து போனர்.

(5) ராபிஃ இப்னு குதைஜ் (ரலி) என்ற பெரியாரும் இவ்வாண்டே இறந்து போனர்கள்.

## ஹிஜ்ரீ-74:

(1) ஹஜ்ரத் ஜாபிர் இப்னு அப்துல்லாஹ் (ரலி), தமது 94-வது வயதில், இவ்வாண்டு புனித மதீனு நகரில் இறந்து போனர்கள்.

(2) இவ்வாண்டு அதிகாரி அப்துல் மலிக், யுத்த களங்களில் நல்ல அனுபவமுள்ளவரும் நல்ல தளபதியுமான ஜுபைர் இப்னு கைஸ் என்பாரை, வட ஆப்ரிக்காவுக்கு அனுப்பி வைத்தார். ஏனெனின், அங்கு யாருக்கும் அடங்காத பர்பரி கூட்டத் தலைவனுய் விளங்கிய கஸீலா என்பான், ஏற்கனவே அங்கு சேவை செய்து கொண்டிருந்த தலைவர் அக்பா என்பாரைக் கொன்று (ஷஹீதாக்கி) விட்டான். இப்படிப் பட்டவனை அடக்குவதற்கே அனுப்பப்பட்டார். எனவே ஜுபைர் இப்னு கைஸ் மகா வீரத்தோடு, தலைவன் கஸீலாவுடன் போரிட்டு இவ்வாண்டு அவனை வெட்டிக் கொன்று விட்டார்.

(3) குதிரை, ஒட்டகம் முதலிய வாகன மில்லாமல், இஸ்லாமிய ஜஹாதுகளில் கால் நடையாகவே பெரும் வீரச் செயல்கள் புரிந்த மிகப் பலிஷ்டரான (பஹில்வான்) ஸஹாபியான ஸல்மா இப்னு அக்வஃ (ரலி) அவர்கள், தமது 80-ம் வயதில் திரு மதீனு நகரில் இறந்து போனர்கள்.

(2) ஹஜ்ரத் ஸயீது இப்னு அபீ வக்காஸ் (ரலி) அவர்களுடைய தங்கை மகனுன ஜாபிர் இப்னு ஸமரா (ரலி) என்பார், இவ்வாண்டு கூபாவில் இறந்து போனர்கள். (தொடரும்.)

# சிறைப் பறவை சிப்கத்துல்லா
## அல்லது
# துப்பு துலக்கிய தூயவர்.

## அத்தியாயம் 3.

"மரியமுக்கு மணமாகி விட்டது"

கரீமுல்லாகானின் வார்த்தைகள், சிப்கத்துல்லாவின் காதுகளில் ரீங்காரம் செய்தன. "மணமாகி விட்டது" என்ற வார்த்தையை மந்தகாசத்தோடு உச்சரித்தார் அவர்.

மரியமுக்கு மணமாகி விட்டது...புரிந்து கொள்ள முடியாத புதிராக இருந்தது; நம்ப முடியாத, நடக்க முடியாத செயலாகத் தோன்றியது. உண்மையை உணர்ந்த சிப்கத்துல்லாவின் சிரசு சிலிர்த்தது; கண்கள் இருளடைந்தன; உடலில் வியர்வை அரும்பியது. நிலை தடுமாறிய நிலைமையில் நின்றார் அவர்; வாழ்க்கை வரட்சியுற்றதாக அவருக்குத் தோன்றியது.

"ஆம், சிப்கத்துல்லா! இன்று காலை மரியமுக்கு மணமாகி விட்டது. மாப்பிள்ளையை நீர் மிகவும் நேசிப்பீர். நம்மில் ஒருவனல்ல அவன். அவன் நேர்மை மிகுந்தவன். அவளுடைய வளமிகு வாழ்வுக்காக வருடக் கணக்கில் திட்டமிட்டு நிறம்பட செயலாற்றினேன். அவளது எதிர் காலத்தை ஏமாற்றம் மிக்கதாகச் செய்திருந்தால், நான் நாசமாகி யிருப்பேன். அவளது எதிர் காலம் எழில் மிகுந்ததாக விருக்கும் என்பது எனது எண்ணம்." சிப்கத்துல்லாவின் தோளில் கைகளைப் போட்டு, மன்றாடும் தோரணையில் நின்றார் கரீமுல்லா. அவரது மனத்தைப் புண்படுத்தி விட்டோமா என்ற சந்தேகம் அவருக்கிருந்தது.

"உங்களுக்கு நான் தந்தி யடித்திருப்பேன்..."

"அதனால் பாதகமில்லை; பயனுமில்லை. எதனையும் மாற்றி யிருக்க முடியாது; ஆம், மாற்றி யிருக்க முடியாது. அது நடந்து தீர வேண்டி யிருந்து. நிரபராதியான நிலையில் நீர் தண்டனை யடைந்திருந்தால்கூட—அவ்வாறு இல்லை என்று நான் சொல்லவில்லை— அவளைச் சுற்றி 'சிறை கறை" இருந்து வர வேண்டு மென்பதை நான் விரும்பவில்லை; அந்த அபவாதத்தை என்னால் சகித்துக் கொண்டிருக்க முடியாது. எனது வாழ்வில், நான் அயோக்கியனாகவும் அக்கிரமக் காரனாகவும் இருந்து வந்திருக்கிறேன்; அதாவது பதினைந்து வருடங்களுக்கு முன்பு வரை கயவனான நான் கண்ணியமிகு வாழ்வைத்

தெரிந்தெடுத்துள்ளேன்: இங்கிலேயில் வாழ்க்கையைப் பற்றி பரந்த நோக்கத்தை நான் கொண்டிருக்கிறேன். எனது கடந்த கால வாழ்வு எனதருமை மகளுக்குத் தெரியாது. இன்று இங்கு இனயத்துல்லா கான் இருக்கிறார்."

"யார் அவர்? துப்பறியும் இலாகாவைச் சேர்ந்த இன்ஸ்பெக்டர் இனயத்துல்லாவா?"

கரீமுல்லா தலை யசைத்தார். அவரது கண்களில் ஆச்சரியக் குறி தென்பட்டது.

"நாங்கள் நல்ல நண்பர்களாக விருக்கிறோம். வருடக் கணக்கில் எங்கள் சினேகம் நீடித்து வருகிறது. இன்று காலை அவர் என்ன சொன்னார் என்பது உமக்குத் தெரியுமா? நேரிய வழியில் உமது மகளை மண முடித்து வைத்தமைக்காக உம்மை பாராட்டுகிறேன்' என்று அவர் தெரிவித்தார். அவர் சொன்னது சரி என்றுஎண்ணு கிறேன்."

கைகளில் முகத்தைப் புதைத்த வண்ணம் பிரம்பு நாற்காலியில் சாய்ந்து விட்டார் சிப்கத்துல்லா.

"எனக்காக எள்ளளவும் வருத்தப்படவில்லை" என்று கூறிய வாறு கைகளை நீட்டி கரீமுல்லாவின் புஜங்களை அவர் பற்றிப் பிடித்துக் கொண்டார். உங்கள் கரங்களில் மற்றொரு பழி ஏற்படாது என்று எண்ணுகிறேன். கரீம் ஷரீப் உங்களைச் சுறுசுறுப்பாக வைத்திருப் பான்......"

பேச்சை திடீரென அவர் நிறுத்தினார். பரம சாதுவைப் போல பட்லர் பஷீர் பக்கத்தில் வந்திருந்து வணங்கி சொன்னான்: "சாஹிப்! அவர் வந்திருக்கிறார் அவரைப் பார்ப்பதற்கு நீங்கள் விரும்புகி றீர்களா?"

"அவர் என்றால் யார்?"

"அவர் தான் கரீம் ஷரீப். அவலட்சணமாகவும் அருவருப்பாக வும் அவர் தோற்றமளிக்கிறார்."

கரீமுல்லாகானின் முகத்தில் கவலையின் ரேகை படர்ந்தது.

"மரியம் எங்கே?—ஜனபா காதிரி."

"புகைப்பட மெடுத்துக் கொள்வதற்காக விவாக உடுப்புகளை உடுத்திக் கொண்டிருக்கிறார்கள். முதலில் அவற்றைக் களைந்து விட்ட போதிலும் புகைப்பட மெடுப்போன் வந்திருப்பதால் அவற்றை மீண்டும் உடுத்திக் கொள்கிறார்கள்; முன் தோட்டத்தில் காமிராவைச் சரிபடுத்திக் கொண்டிருக்கிறான் புகைப்படக்காரன். சின்ன எஜமானி யிடம் நான் சொன்னேன்......"

"நீ ஒரு வாயாடி, வம்புக்காரன். கரீம் ஷரீபை உள்ளே அனுப்பி வை. (சிப்கத்துல்லாவை நோக்கி) நீர் அவனைக் காண்பதற்கு விரும்புகிறீரா?"

சிப்கத்துல்லா எழுந்தார். "இல்லை, உங்கள் தோட்டத்தில் நான் உலாவிக் கொண்டிக்கிறேன். பயங்கரமான சிறை வாசத்தை நினைவூட்டக்கூடிய எதனையும் காண்பதற்கு நான் விரும்பவில்லை."

கரீம் ஷரீபை பஷீர் உள்ளே அழைத்து வருவதற்குள் திறந்த வெளி வழியாக சிப்கத்துல்லா மறைந்து விட்டார்.

கரீம் ஷரீப் குட்டையானவன்; உடல் மெலிந்திருந்தது; தலை வழுக்கையாக விருந்தது. கருப்புக் கண்ணாடி போட்டிருந்தான். இரண்டொரு நிமிடம் உதட்டைக் கடித்தவாறு நிலைமையை ஊகித்தறிய முயற்சித்தான். அவனது ஆடை அலங்கோலமாக விருந்தது. சுருக்கம் விழுந்த சுர்வாலுக்கு ஈடு செய்யும் வகையில் அவனது செருப்பு புத்தம் புதியதாக விருந்தது. துருக்கி தொப்பியைக் கையிலேந்திய வண்ணம் எதிரியை எடை போட்டுக் கொண்டிருந்தான் அவன்.

மரண அமைதியைக் குலைத்தவர் கரீமுல்லாகான் தான்.

"வா, கரீம்! வந்து உட்கார்."

கரீமுல்லா கானை நெருங்கிச் சென்றான் கரீம் ஷரீப்.

"மிக நல்ல இடம், அப்பா! எல்லாம் நேர்த்தியாக இருக்கின்றன. இன்னும் பட்லர் பஷீரை வைத்துக் கொண்டிருக்கிறாயா? அவன் சீர்திருந்தி விட்டானா?—ஆம், அவன் சீர்திருத்தம் கண்டு விட்டானா?

அவனது குரல் கம்மி யிருந்தது; புகார் கூறுவதாக விருந்தது. அவனது குழி விழுந்த கண்கள், கரீமுல்லாகானைக் கவனித்தவண்ணமிருந்தன.

"இப்பொழுது அவன் திருடச் செல்வதில்லை."

"அந்த வார்த்தையை உபயோகிக்காதே—அது மிகவும் இழிவானது."

"உனது தொப்பியைக் கொடு, அதனை மேஜையின் பேரில் வைக்கிறேன்." கரீமுல்லாகான் கை நீட்டினார்; மற்றவன் தொப்பியை இழுத்துக் கொண்டான். "இல்லை, வேண்டாம். இங்கு இருக்கும் வரை எதனையும் இழப்பதில்லை என்று வாலிப நண்பனொருவருக்கு உறுதி அளித்திருக்கிறேன். இந்த இடத்தில் நீ எத்தனை வருடங்களாக வசித்து வருகிறாய்?"

"சுமார் பதினைந்து ஆண்டுகளாக."

கரீமுல்லா கட்டிலில் உட்கார்ந்தார். அழையாத அந்த விருந்தாளியும் அவருக்கு எதிர்த்தாற் போல நாற்காலியை இழுத்துப் போட்டு உட்கார்ந்தான்.

"ஆ, சௌகரியமாக, சகல வசதிகளுடன் வாழ்க்கை நடத்தி வருகிறாய்; வாழ்த்துகிறேன். நீ விரும்பிய போது விரும்பிய இடத்துக்குச் செல்லும் சுதந்திரமும் பெற்றிருக்கிறாய். பதினான்கு வருடங்களை உல்லாசமாகக் கழித்து விட்டாய். பிற்பகலில் நான்கு மணிக்கு இருட்டறையில் பூட்டி வைக்கப்பட்டிருப்பதை விட இது மேலானதல்லவா? 'மானிட மாசு போக்கும் மன்றம்' இன்னும் பழைய மாதிரியே இருக்கிறது—மன்னிக்கவும், நீ அங்கு சென்றதே கிடையா தென்பதை மறந்து விட்டேன்."

"நான் அவ்வழியே மோட்டாரில் சென்றிருக்கிறேன்."-கரீமுல்லா கவனமாக, வேண்டு மென்றே கூறினார். ஏளனத்தோடு கரீம் ஷரீப் கேட்டார்.

"ஓ, நீ அவ்வழியே மோட்டாரில் சென்றாயா? அப்போது எனக்குத் தெரிந்திருந்தால், உனக்கு மகத்தான வரவேற்பு அளித்திருப்பேன். நீ மோட்டாரில் வந்த அன்று, அந்த ஸ்தலத்தை அழகு படுத்தி, அலங்கரித்து இருக்க வேண்டும். கரீமுல்லா, கன குஷியாக நீ மோட்டாரில் சென்றாயா?"

"சிகரெட் பற்ற வைக்கிறாயா?"

"இல்லை, வேண்டாம். அந்த வழக்கத்தை விட்டு விட்டேன்; பதினைந்து வருடங்களாக அந்த வழக்கத்தை இன்னும் நீ வைத்துக் கொண்டிருக்கிறாயா? இன்னும் சில பழக்கங்களுக்கும் நீ பலியாகலாம். ஒருவனுடைய ஜீவிய காலத்தில் பதினைந்து வருடங்கள் மிக நீண்ட காலமாகும்."

தொந்தரவும் தொல்லையும் அளிப்பதற்கு ஆயத்தமாக கரீம் ஷரீப் வந்திருக்கிறான் என்பது அவனது ஏளனமான பேச்சிலிருந்து புலனாயிற்று அவனது அறைகூவலை ஏற்றுச் சமாளிப்பதென கரீமுல்லா உறுதி கொண்டார்.

"நீ சுட்டு வீழ்த்திய மனிதன் சில புதிய பழக்கங்களை மேற்கொள்வதில் மகிழ்ச்சி கண்டிருப்பான். இரு ஆண்டுகளுக்குப் பிறகு அவன் இறந்தான்."

"அவன் நரகத்தில் இருப்பான் என்று நான் நம்புகிறேன். அவலட்சண ஆசாமி! எனவே, எழில்மிகு வகையில் நீ காலங் கடத்தி வந்தாயா? அழகிய வீடு, வேலைக்காரர்கள், இன்னோரன்ன பிற வசதிகள் இன்னும் போதாதென்று நினைத்த போது நினைத்த இடத்துக்கு மோட்டாரில் உல்லாசமாகச் சென்று வரவும் உரிமை பெற்றிருக்கிறாய். நீ மகா தந்திரசாலி." (தொடரும்)

Edited by M. S. ABDUL KHUDUS.
Published by Hajee M. A. Shahul Hameed & Sons.
Printed at Shahul Hameedia Press, Madras.

12/7/57

# 'தாரீகுல் குலபா

## இஸ்லாமிய கலீபாக்களின் அரசாங்க சரித்திரங்கள்

நமது இஸ்லாமிய கலீபாக்களின் சரித்திர விஷயங்களைத் தெரிந்து கொள்ள வேண்டியது எல்லா முஸ்லிம்களுக்கும் அத்தியாவசியமான கடமை யாகும். ஏனெனில் இச்சரித்திரங்களில் இஸ்லாமின் .ஆரம்பமும், இஸ்லாத்தை நிலைகாட்டிய தத்துவங்களும், இஸ்லாத்தின் பக்தி விசுவாசங்களும், இஸ்லாத்தின் சமத்துவங்களும், இஸ்லாத்தின் நீதி பரிபாலனங்களும் ஒருங்கே நிறைந்திருக்கின்றன. ஆதலின், இம்மகிமை பொருந்திய சரித்திரங்களை ஒவ்வொரு முஸ்லிமும் முஸ்லிம் அல்லாதாரும் அவசியம் வாசிக்க வேண்டும்.

இதில் முதற் பாகமாக நம் நபி பெருமானார் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் சரித்திரமும், முதல் கலீபாவாகிய ஹஸரத் அபூபக்கர் ஸித்தீக் றலியல்லாஹு அன்ஹு அவர்களின் சரித்திரமும் அடங்கியது. கிளேஸ் காகிதத்தில் கிரௌன் 8-பேஜ் ஸைஸில் அச்சிடப்பட்டு பைண்டு கட்டியது. விலை ரூ. 1–8–0

மேற்படி இரண்டாவது பாகம்: இதில் ஹஸரத் உமர் றலியல்லாஹு அன்ஹு அவர்களின் சரித்திரம் விரிவாய் எழுதப் பெற்றது. விலை ரூ. 1–4–0

மேற்படி மூன்றும் பாகம்: இது ஹஸரத் உஸ்மான் (றலி) அவர்களின் கிலாபத்தும், ஹஸரத் அலி (ரலி) அவர்களின் கிலாபத்தும், ஹஸரத் இமாம் ஹஸன் (ரலி) அவர்களின் கிலாபத்தும், பனீ உமையாவின் கிலாபத்தும் அப்துல் மலிக் அவர்களின் கிலாபத்தும் ஆக 5- கிலாபத்து, ஆட்சி வரலாறுகள் அடங்கியது. விலை ரூ. 1–4–0

ஷை மூன்று பாகமும் சேர்ந்தது ரூ. 3–8–0

---

கிடைக்குமிடம் :—

**ஹாஜி எம். எ. ஷாஹுல் ஹமீது அண்டு ஸன்ஸ்,**

நெ 20, ஹைரோட், திருவல்லிக்கேணி, மதரூஸ், 5.

எதிர் பாருங்கள்! எதிர் பாருங்கள்!!

2C

# 1957-வது வருஷத்தின்
# ஹமீதிய்யா முஸ்லிம் காலண்டர்

(வெளிவருகிறது)

இதில் இங்கிலீஷ், தமிழ், அரபு ஆக மூன்று தேதிகளும் 3 கலர்களில் அச்சிடப்பட்டு, ஒரு மாதத்திற்கு ஒரு ஷீட்டாக 12 ஷீட்டுகள் அடங்கியுள்ளன. ஒவ்வொரு ஷீட்டிலும் தொழுகைகளின் நேரங்களாகிய அவ்காதுஸ்ஸலாத்தும் சேர்க்கப்பட்டுள்ளது. இவை சொற்ப காலண்டர்களே அச்சிட்டு வருவதால் ஜனவரி மீ வருவதற்குள் செலவாகி விடுவது சகஜம். ஆதலால் தங்களுக்குத் தேவையுள்ள காலண்டர்களுக்கு நவம்பர் மாதத்திலேயே ஆடர் செய்து பெற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

ஒரு காலண்டர் விலை அணா. 10

நூறு காலண்டர்கள் விலை ரூ. 50

---

ஹாஜி எம். எ. ஷாஹுல் ஹமீது அண்டு ஸன்ஸ்
நெ. 20, ஹைரோட், திருவல்லிக்கேணி, மதராஸ் 5.